40 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

உதயன்

சுடர்: 29 கதிர்: 330 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 5, புதன் 22.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily




# அரசுக்கு எதிர்ப்பு வலுக்கிறது தெற்கில்

## தலைநகரில் நேற்று மாணவர்களும், தொழிற்சங்கங்களும் பெரும் போராட்டம்



கொழும்பு, ஒக்.22
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ள நிலையில், அரசுக்கு எதிரான போராட்டங்கள் தெற்கில் வலுக்க ஆரம்பித்துள்ளன. நேற்றைய தினமும் அரசுக்கு எதிராகக் கொழும்பில் பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கொழும்பு தாமரைத் தடாக வீதியில் பல்கலைக் கழக மாணவர்களால் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கல்வித்துறையில் காணப்படும் சீரழிவு, இலவச கல்வி முறை அழிப்பு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களின் வருகை ஆகியவற்றுக்கும் இன்னும் பல்வேறு காரணிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே மாணவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், பதாகைகள், உருவப் பொம்மைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக தாமரைத் தடாகம், நகர மண்டம் மற்றும் ஹோர்ட்டன் பிளேஸ் ஆகிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.
அதேவேளை, தொழிற் சங்கங்களால் நேற்றைய தினம் போராட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ள 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும், அத்தியாவசியப் பொருள்கள் விலைகள் குறைக்கப்பட வேண்டும் போன்ற பல கோரிக்கை

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தடை நீக்கத்தில் அரசியல் இல்லை

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக தடை நீக்கப்பட்டது சட்ட வரையறைக்கு உட்பட்டது. அதில் எந்தவொரு அரசியல் கலப்பும் இல்லை. அரசியல் பொறிமுறையும், நீதிமன்றப் பொறிமுறையும் தனித் தனியே இயங்குவதே ஆரோக்கியமானதும், ஜனநாயகத்தின் அடையாளமும் ஆகும் - என்று தெரிவித்துள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடக மற்றும் தகவல் நிறுவனம் நேற்றைய தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது, அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு வந்த ரயிலால் வெறிச்சோடிய பஸ்கள்

### 75 வீதம் வருமானம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், வெளிமாவட்டங்களுக்குப் பயணிக்கும் பஸ்களின் வருமானம் 75 வீதத்தால் குறைவடைந்துள்ளது.
கடந்த 13 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்பின்னர் பொதுமக்கள் தமது பயணத்துக்கு ரயில்களையே பெரிதும் நாடுகின்றனர். ரயில் கட்டணங்களுடன் ஒப்பிடும் போது பஸ் கட்டணங்கள் அதிகமாக உள்ள

❖22 ஆம் பக்கம் பார்க்க



1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21, 22ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்கள், சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் என மொத்தம் 67 பேர் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டனர். அதன் 27 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. அதில் உயிரிழந்தோரின் உறவுகள், மருத்துவர்கள், மருத்துவத் தாதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21)

## தீபாவளியை முன்னிட்டு மதுபானம் விற்கத் தடை

யாழ்ப்பாணம், ஒக்.22
இன்று தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறிச் செயற்படும் மதுபான விற்பனை நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மது வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்து மக்களின் பண்டிகையான தீபாவளியை முன்னிட்டு, மதுபான விற்பனை நிலையங்களை இன்றும், நாளையும் மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து மா

❖22 ஆம் பக்கம் பார்க்க

## நகைகளை இத்தனை நாள் என்ன செய்தார் மஹிந்த?

### மனைவிக்கு இட்டு அழகு பார்த்தாரா என்றும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 22
"கிளிநொச்சியில் மக்களிடம் கையளிக்கப்பட்ட தங்க நகைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தனை நாள் எங்கே அடைவு வைத்திருந்தார்? அல்லது அவரது மனைவிக்கு அணியக் கொடுத்து அழகு பார்த்தாரா ? இதற்கான பதிலை, ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்ற அரசமைப்பு பாதுகாப்பை விட்டு வெளியில் வந்து சொல்ல

❖22 ஆம் பக்கம் பார்க்க

## கோரிக்கைகளை நிறைவேற்றாத தலைமையில் மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் ஏன்?

### வடக்கு சிவில் சமூகத்தினர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக். 22
வடக்கின் அத்தியாவசிய அபிவிருத்தி சார்ந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றாத நிலையில், வீணாக மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் ஏன் ஜனாதிபதி தலைமையில் நடத்தப்படுகின்றது என்று கேள்வியெழுப்பியுள்ளனர் வடபகுதி சிவில் சமூகத்தினர்.
"மஹிந்த ராஜபக்ஷ நினைத்ததை நடத்தி முடிக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக உள்ள போதும், வடக்கு அபிவிருத்தி தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை அவர் உதாசீனம் செய்து வருகின்றார்" - என்றும் வடபகுதி சிவில் சமூகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.
இதுகுறித்து வடபகுதி சிவில் சமூகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 13 ஆம்

❖22 ஆம் பக்கம் பார்க்க



குடாநாட்டில் தற்போது மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. கடந்த சில நாள்களாக நிலவி வரும் இந்தக் காலநிலையால் மீனவர்கள் கடலுக்குச் செல்வது குறைந்துள்ளது. தான் கடலுக்குச் செல்லக் கூடிய காலநிலை நாளையாவது வருமா என்பதை அறிந்து கொள்ள, குருநகர் கடற்கரையில் நடைபோடும் மீனவர் ஒருவர். (ற-21)

## இரவு - பகல் கூத்தடிப்பவர்களால் சர்வதேசத்தை வெல்ல முடியாது

சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஒக்.22

இரவு பகலாகக் கூத்தடிப்பவர்களையே நாம் அனுப்பியுள்ளளோம். இவ்வாறான நிலையில் சர்வதேசத்தை எம்மால் எவ்வாறுவெற்றிகொள்ளமுடியும்என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்த சர்வதேச போராட்டத்தை நாம் முன்னெடுக்கவில்லை. அதுதொடர்பாகவாதபிரதிவாதங்களும் இருக்கவில்லை. எமக்கு உபாய மார்க்கங்களும் இருக்கவில்லை. பயங்கரவாத சக்திகள் வெறுமனே இருக்கவில்லை. அவர்கள் சர்வதேச சக்திகளின் ஒத்துழைப்பிலேயே உள்ளனர். குறிப்பாக மேற்குலக சக்திகளின் பின்னணியிலேயே உள் ளனர். ஆகவே இதனை கருத்தில்கொண்டுபோராடக்கூடிய முறையான வெளிவிவகார கொள்கை, உபாய மார்க்கங்கள், செயற்றிட்டங்கள் மற்றும் உரிய அதிகாரிகளை சர்வதேச முனைக்கு நாம் அனுப்பவும் இல்லை. இரவு பகலாக கூத்தடிக்கும் நபர்களையே இன்று அங்கு அனுப்பியுள்ளோம். அவ்வாறு சர்வதேசத்தை வெற்றி கொள்ள முடியுமா? முடியாது."- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# பொதுத் தேர்தலில் குதிக்க தயாராகிறது பொதுபல சேனா

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதித் தேர்தல் அல்ல பொதுத் தேர்தல் ஒன்றையே தாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர்.

தங்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் பயனில்லை என்றும் எதிர் வரும் பொதுத் தேர்தலில் பிக்குகள் அல்லாத தலைவர்களை முன்னிறுத்தி போட்டியிட தீர்மானித்துள்ளோம் என்றும் கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஞானசார தேரர் குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:

பொதுபல சேனா என்ற பெயரில் அல்லது வேறு சிங்கள பௌத்த கட்சி பெயரில் தேர்தலில் போட்டியிடவுள்ளோம். எமது அமைப்பால் அறிவிக்கக்கூடிய பொது வேட்பாளர் ஒருவர் உள்ளார். ஆனால் அவரது பெயரை இப்போது கூற முடியாது. சரியான நேரத்தில் அதனை வெளியிட உள்ளோம். அரசியல் ரீதியில் ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து செயற்பட முடியும். அவர்களது யோசனை திருப்தி அளிக்கின்றது. நிறைவேற்று ஜனாதிபதி இருக்க வேண்டும் என கருதவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி சரியான ஒருவர் கையில் சென்றடைய வேண்டும். தவறானவரிடம் சென்றால் பிரச்சினையே"- என்று தெரிவித்துள்ளார். (ற)





தீபாவளியை முன்னிட்டு பல ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று மாலை யாழ். முற்றவெளிப் பகுதியை முற்றுகையிட்டதால் அங்கு நேற்றுப் பெரும் சன நெருக்கடி ஏற்பட்டது. பகற்பொழுதில் மழை இடையிடையே தனது கைவரிசையைக் காட்டியதால் தீபாவளி விற்பனை களையிழந்து காணப்பட்டது. ஆனாலும் மாலையில் மக்கள் தீபாவளிக் கொள்வனவுக்காக மக்கள் திரளத் தொடங்கினர். பிரதான வீதிகள் எங்கும் வாகனங்கள் நிறுத்தப்பட்டதால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்குப் பொலிஸார் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (ற-17)

## புலித் தடை நீக்கத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றுங்கள்

கோருகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஒக்.22

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை ரத்துசெய்து, அந்த இயக்கத்தை மீளத் தடை செய்ய வலியுறுத்தும் பிரேரணை, சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விசேட நாடாளுமன்ற அமர்வைக் கூட்டி இதுகுறித்து ஏகமனதாக பிரேரணையொன்றை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் யோசனை முன்வைத்தார். அதன்மூலம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் தடை விதிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை விடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது என்று சஜித் குறிப்பிட்ட போது, குறுக்கிட்ட அமைச்சர் வாசுதேவநாணயக்கார, நாட்டை விடுவிப்பதற்கான நடவடிக்கையின்போது ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

அதனையடுத்து, சபையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்ற அதேவேளை, நாட்டை விடுவிக்கும் நடவடிக்கைக்கு அப்போதிருந்த அனைத்துக் கட்சிகளும் பங்களிப்பு செய்திருந்தன என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். (ற)

## விபத்துகள்

அளவெட்டி

### விளையாட்டின் வேகத்தில் முறிந்தது கால்

தாச்சிப் போட்டியில் பங்குபற்றிய வீரர் ஒருவருக்கு, சகவீரருடன் மோதி விழுந்ததில் கால் முறிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அளவெட்டி, மணற்புலம் பகுதியில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் நிரோஜன் (வயது-15) என்பவரே கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-36)



பண்டாரவளை

### பஸ் விபத்தில் 35 பேர் காயம்

பண்டாரவளை அட்டம்பிட்டிய உடமல்வத்த பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 35 பேர் காயமடைந்துள்ளனர். இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றே நேற்றுக் காலை 9.30 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அட்டம்பிட்டியவில் இருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி 15 மீற்றர் வளைவில் விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீசாலை

### மோ.சைக்கிள் மோதி வயோதிபர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நடந்து சென்ற வயோதிபரை மோதிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை ஏ-9 வீதியில் நடந்துள்ளது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த செல்லர் சுப்பையா (வயது-68) என்பவரே காயமடைந்தவராவார். விபத்தை அடுத்து அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மோதியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ற-9)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள்
குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி ➔ புகையிரதகடவை ➔ AF or ஆரியகுளத்திலிருந்து நக்கா றோட் ➔ AF



பக்கங்கள்: நாற்பது

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 5 புதன் (22.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 330

# தமிழர்கள் தம்மை தாமே ஆளும் காலம் விரைவில்

## தீபாவளி நிகழ்வில் மாவை எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, ஒக்ரோபர் 22

**தமிழர்கள் தங்களையே ஆளுகின்ற காலம் கனிந்துவருகின்றது என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

**நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியின் புதுமுறிப்பு மைதானத்தில் 'உதயன்' நிறுவனம் நடத்திய தீபாவளி விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான்தீபாவளியைக்கொண்டாடாது விட்டாலும் தீபாவளியைக் கொண்டாடும் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். எமது வரலாற்றில் எமது மக்கள் எத்தனையோ இழப்புக்களையும் பேரழிவுகளையும் சந்தித்தபோதும் எமது கிராமங்களில் கண்ணீர் ஓய்ந்ததாக இல்லை. இன்னும் மாற்றுத் திறனாளிகளாகவும், பெற்றோர்களை இழந்தவர்களாகவும் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிவோம்.

இவ்வாறான நிலையில் புதுமுறிப்பு. ஊற்றுப்புலம், செல்வாநகர் ஆகிய கிராமங்களிலிருந்து இளைய சமுதாயத்தை அணிதிரட்டி இந்த மைதானத்தில் ஒரு விளையாட்டுப் போட்டியை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்குகின்ற நிகழ்வாக இது இருந்தாலும் தோற்றுப் போனவர்கள் என்ற மனப்பாங்கு உருவாகாமல் இருக்கும் பக்குவத்தை உருவாக்குவதற்கான ஒரு விளையாட்டு விழாவாக இது அமைந்திருக்கின்றது.

எங்களுடைய இனத்தின் விடுதலைப் போராட்டக் காலத்தில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது தோற்றுப்போன சமூகம் என்று ராஜபக்ஷ அரசு எங்களைப் பார்த்துக் கூறியது. கறைபடிந்த அந்த வரலாற்றை மாற்றியமைத்த எங்கள் தமிழ் சமுதாயம் போருக்குப் பின்னர் நடந்த ஒவ்வொரு தேர்தலிலும் ராஜபக்ஷ அரசை தோற்கடித்திருக்கின்றார்கள் என்பது தான் வரலாறு. உலகமும் அதைத்தான் நம்புகின்றது. வட மாகாண சபைத் தேர்தலில்கூட எங்களுடைய மக்கள் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று அரசுக்கு வாக்களியுங்கள் என்று கூறியபோதிலும், அரசு அடியாள்களை வேட்பாளராக நிறுத்தியபோதிலும் அலைஅலையாகத் திரண்டு தங்களுடைய ஜனநாயகக் கட

(22ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு நாள் மழையால் 316 குடும்பங்கள் பாதிப்பு

### உலர் உணவுப் பொருள்கள் உடனடியாக விநியோகம்



யாழ்ப்பாணம், ஒக்.22

கடந்த இரு நாள்களாகப் பெய்த மழையினால் யாழ். கரையோரப் பகுதிகளில் 316 குடும்பங்களைச் சேர்ந்த 877 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக நேற்று முதல் ஏழு நாள்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டதாக யாழ்.பிரதேச செயலர் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஒரு வாரத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களை நேற்றுப் பிற்பகல் முதல் விநியோகிக்க ஆரம்பித்ததாக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் தெரிவித்தார்.

வசந்தபுரம், நித்திய ஒளி,

(22ஆம் பக்கம் பார்க்க)


## தீபாவளிக்குப் புடைவை வாங்க ரயிலில் கொழும்புக்கு இளசுகள்

தென்மராட்சி, ஒக். 22

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் கூட்டமாக ரயிலில் கொழும்புக்குச் சென்று தமக்குத் தேவையான தீபாவளி உடுபுடைவைகளை எடுத்து வந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு தபால் ரயிலில் கொழும்புக்குச் சென்ற இளவட்டங்கள் ஞாயிற்றுக்கிழமை பகல் முழுவதும் கொழும்பில் தமக்குத் தேவையான உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்து அன்று இரவு ரயிலில் ஏறி நேற்றுமுன்தினம் காலை வீடுகளுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களிடம் கேட்டபோது, ஒருவருக்கு ஆயிரம் ரூபா மட்டும் போக்குவரத்து மற்றும் உணவுக்குச் செலவானதாவும், கொழு ம்பு சென்றதால் யாழ்ப்பாணத்தில் உடுபுடைவைகளுக்குச் செலவிடும் தொகையை விடக் குறைந்த விலையில் பெருமளவு பொருள்கள் கொள்வனவு செய்து பல ஆயிரம் ரூபாவை மிச்சப்படுத்தியதாகவும் தெரிவித்தனர். அத்துடன் கொழும்புக் கடைகளில் பொருள்கள் வாங்கியமைக்குப் பெறுமதியான பரிசுப்பொருள்களும் கிடைத்ததாகவும் அவர்கள் கூறினர். (த-9)



ஜனவரியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் சட்ட விரோதமானது என்று வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் வேலைத்திட்டமொன்றை, ஜே.வி.பி நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆரம் பித்தது. அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இதனை ஆரம்பித்து வைத்தார். (த)

## நாளாந்தம் 3 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த் தொற்றினால் நாளாந்தம் 3 பேர் பாதிக்கப்பட்டுயாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். எனவே ஒவ்வொருவரும் அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினமும் 3 பேர் அவ்வாறு டெங்குத் தொற்றுக் குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த மாதம் மாத்திரம் 44 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வருடம் இதுவரை 628 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளனர். மாவட்டத்திலுள்ள சகல சுகா[illegible] வைத்திய அதிகாரி பிரிவுகளிலிருந்தும் பலர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## வைத்தியசாலை படுகொலை ஆவணமாக்கப்பட வேண்டும்

### நினைவு நிகழ்வில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஆவணமாக்கப்படவேண்டும். அவர்களின் நினைவாக நினைவுத் தூபி ஒன்றும் நிறுவப்படவேண்டும் என்று வைத்தியசாலை தாதியப் பரிபாலகர் சந்திரமௌலீஸ்வரன் தெரிவித்தார்.

சுட்டுக் கொல்லப்பட்ட 21 பேரினதும் நினைவஞ்சலி யாழ். போதனா வைத்தியசாலையில் எக்ஸ்றே பிரிவு முன்பாக நேற்றுமுற்பகல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு நினைவஞ்சலி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 3 கடைகள் தீ விபத்தினால் எரிந்து நாசம்

முல்லைத்தீவு, ஒக் 22

முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று கடைகள் எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நகைக் கடையொன்றில் ஏற்பட்ட தீ, ஏனைய இரு கடைகளுக்கும் பரவி[illegible] ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது. இதனால் அருகிலிருந்த புடை[illegible] கடைகள் இரண்டும் எரிந்து நாசமாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார், இலங்கை மின்சார சபையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10.15 மணியள வில் இடம்பெற்ற இந்த தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்த முல்லைத்தீவு

(22ஆம் பக்கம் பார்க்க)

## அடுப்புக்குள் கால் வைத்த குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஒக். 22

அடுப்பினுள் தவறி விழுந்த ஒன்றரை மாதக் குழந்தை தீக்காயத்துக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் காயத்தினால் ஏற்பட்ட கிருமித் தொற்றினால் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தது.

யாழ். கே.கே.[illegible] வீதியில் உள்ள வீட்டில் [illegible] இடம்பெற்ற இச்சம்பவத்தில் உருத்திரபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஜீவகரன் மேகித்யா என்ற பெண் குழந்தையே உயிரிழந்தது.

குறித்த குழந்தையின் தாயாரின் சகோதரனுக்கு கடந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி விமலேஸ்வரி நரசிங்கமூர்த்தி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலேஸ்வரி நரசிங்கமூர்த்தி 18.10.2014 சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தெய்வானை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நரசிங்கமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சோதி நாகரட்ணம்- அகிலாண்ட நாயகியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், யோகேந்திரன், அன்னலட்சுமி, மனோகரன், வரதலட்சுமி ஆகியோரின் சகோதரியும், உமாகாந்தன், உமாராஜேஸ்வரன், அகிலாண்டநாயகி, ஞானபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பாமினி, சூசன், ஜெயதேவா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், விதுஷன், மெலிசா, ஓசியான், சுருதி, மஞ்சரி, சத்யன், ஹரிஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2014) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5642

தகவல்:
க.நித்தியானந்தன்
(மைத்துனர்- கிராம சேவையாளர் - J/68)

## தேர்தலுக்கு முன்னதாக ஆறு பிரதியமைச்சர்கள்

### நியமிக்கத் தீர்மானித்துள்ளதாம் அரசு

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக புதிதாக ஆறு பிரதியமைச்சர்களை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாகாண சபைகளில் அமைச்சர் பதவிகளை வகித்து பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேருக்கே பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசின் முக்கியஸ்தர்களுக்கிடையில் ஏற்கனவே இது தொடர்பான பேச்சு நடத்தப்பட்டுள்ளதோடு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்தப் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படக் கூடும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ற-22)

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

### மாட்டிறைச்சிக் கடை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015

01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையிலான காலப்பகுதிகளுக்கு கீழ்காணும் குத்தகைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் வழங்கப்படும். கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி அரக்கு முத்திரை இடப்பட்டு தவிசாளர், பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்படடிருக்கும் கேள்விப்பெட்டியிலோ

2014ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 04ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வவுனியா என்ற விலாசத்துக்கு குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் யாவும் 04.11.2014ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விப்பத்திரத்தை 20.10.2014 – 03.11.2014 பி.பகல் 3.00 மணிவரை வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் கேள்விச்சபை கூட்டத்தில் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி தொடர்ச்சியாக 03 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் கேள்விப்படிவம் பெறப்பட வேண்டும்.
2. ஏற்கனவே குத்தகை கேள்வி கோரலில் பிரதேசசபை கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவங்கள் வழங்கப்படமாட்டா.
3. சூடுவெந்தபுலவு மாட்டிறைச்சிக்கடையை கேள்வி கோரல் மூலம் குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சூடுவெந்தபுலவு விலங்கறுமனையை மட்டுமே உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்படும்.
4. சித்தியெய்தும் கேள்விதாரர் 04.11.2014 இல் இருந்து 07 (ஏழு) நாட்களிற்குள் 1/3 வைப்புத்தொகையை செலுத்தத் தவறின் குத்தகை கேள்வி இரத்துச்செய்வதுடன் கேள்வி வைப்பு மீளளிக்கப்பட மாட்டாது.

| இல | கடை விவரம் | வருடாந்த குத்தகை | மீளளிக்கப்படும் வைப்பு | கேள்விப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடை சூடுவெந்தபுலவு | 420,882.90 | 8,000.00 | 1000.00 |

குறிப்பு : கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது


கபிரியேல் அந்தோனி ஐயா,
தவிசாளர்,
பிரதேச சபை,
வெங்கலச் செட்டிகுளம்

பிரதேச சபை,
வெங்கலச்செட்டிகுளம்,
20.10.2014

(C/17090)(10.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி





### அமரர் தயாபரன் சிவதர்ஷன்

(உரிமையாளர் சிவதயா பிறிண்டேர்ஸ்)

தோற்றம் 27.09.1990 — மறைவு 23.09.2014

திதி: 22.10.2014

எம் அன்பு மகனே சிவதர்ஷா!
கனவுகளை கானல் நீராக்கி
காலத்துயர் சுமந்தோம்
கண்ணீரில் கரைகின்றோம்
ஞாலம் உள்ளவரை நாமும் உள்ளவரை
வாழும் நாளெல்லாம் நீயே எம் நினைவுள்
பாழும் விதி பிரித்தால் பந்தம் அகன்றிடுமா?
நாளும் எம் நினைவில் நீயே உயிர்த்திருப்பாய்!


தயா அச்சகம்
"சாந்தி"
575, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம். 077 396 5214

குடும்பத்தினர்.
தயா வெளியீடு,
வெற்றி இலக்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம்

(66/2, உக்கிளாங்குளம், வவுனியா)



கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 66/2, உக்கிளாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம் 19.10.2014 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை லெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரவேலு - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், உமாதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேந்திரராசா, புஸ்பராசா, தவராசா (இல.29, தினச்சந்தை, வவுனியா), நாகேஸ்வரி, சிவராசா ஆகியோரின் பாசமிகு தாயும், கவிதா, சத்தியா, அனோஜா, வசீகரன், ரூபிகா ஆகியோரின் அன்பு மாமியும், டிலான், அகில், கவின், கருசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/2, உக்கிளாங்குளம்,
வவுனியா.

(52176) (45.3.6)

தகவல்: குடும்பத்தினர்
024 568 0247

## 14 ஆம் ஆண்டின் நினைவில்

வாழ்வுக்காக 08.01.1960

ஓய்வுக்காக 25.10.2000



### அமரர் கந்தப்பு தவராசா (பவா)

திதி: 22.10.2014

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்தடிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தேவிடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

நினைவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்.

## தென்மராட்சி வலயத்திலுள்ள 10 பாடசாலைகளுக்கு பரிசில்

வரணி, ஒக்.22

பிள்ளைநேய பாடசாலைகளின் செயற்றிட்ட அணுகுமுறை தொடர்பில் தென்மராட்சி கல்வி வலய மட்டத்தில் 10 பாடசாலைகள் 2014ஆம் ஆண்டுக்கான பரிசில்களைப் பெற்றுள்ளன. அவை தரம் III பாடசாலைகளாகும்.

இந்தப் பாடசாலைகளுக்கான பரிசில்கள் அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தின விழாவின்போது வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அவர்களினால் குறித்த பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பரிசில்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, போக்கட்டி அ.த.க.பாடசாலை, போக்கட்டி றோ.க.த.கபாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் மற்றும் வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை என்பவையே அவையாகும். (வ-122)

## ரயில்பாதை அருகிலுள்ள வீதிகளில் வெள்ளத்தால் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

கொக்குவில், கோண்டாவில் ரயில் பாதை அருகே செல்லும் வீதிகளில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதால் பொது மக்கள் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதிகள் ஊடாக ரயில் பாதையின் இருமருங்கிலும் செல்லும் வீதிகளில் தற்போது பெய்யும் மழையால் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கி காணப்படுகின்றது.

ரயில் பாதையின் கீழ் பாலங்கள் அமைக்கப்பட்டாலும் கூட சரியான முறையில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு உரிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அந்த வீதிகளில் வெள்ளம் இடையூறு ஏற்பட்டுள்ளதுடன் அந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்களின் குடியிருப்புக்களும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.



வழிந்தோடமுடியாது தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கு

தொடர்ச்சியாக மழை பெய்தால் அந்தப் பகுதியில் கூடுதல் வெள்ளம் தேங்கும் என்பதுடன் குடியிருப்பாளர்களும் இதனால் பல விதங்களில் பாதிக்கப்பட நேரும்.

வீதிகளில் தேங்கும் இந்த வெள்ளத்தை அகற்றுவதற்கு உரிய வெள்ளம் வழிந்தோடும் வடிகால்வாய்களை ஏற்படுத்த வேண்டும் என்று அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## கந்தசஷ்டி உற்சவம்

வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அன்றையதினம் விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து மாலை 6 மணிக்கு முருகப்பெருமான் உள்வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு பூசைகள் நடைபெற்று மாலை 6 மணிக்கு சூரசம்காரம் நடைபெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும். (வ)

## றோட்டறக்ட் கழக ஒன்றுகூடல்

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்கான சின்னஞ்சூட்டும் வைபவமும் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை செயற்பட்ட பழைய கழக அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், ஒன்றுகூடலும் நடத்தப்படவிருப்பதால் குறிப்பிட்ட கால இடைவெளியில் கழகத்தில் செயற்பட்ட பழைய உறுப்பினர்களை இன்று புதன்கிழமை கழகத் தலைவர் செ.கஜேந்திரா, செ.டினேஸ்குமார் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கழக நிர்வாகம் கேட்டுள்ளது. (ஓ-ரி)

### ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, ஒக்.22

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (வ-173)

## சிறப்பாகச் செயற்பட்ட நூலகங்களுக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

கடந்த வருடம் சிறப்பாகச் செயற்பட்ட நூலகங்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் வருடாவருடம் பொது நூலகங்களில் நடத்தப்படும் தேசிய வாசிப்பு மாதத்தில் (ஒக்ரோபர்) வாசகர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நூலகங்களைத் தெரிவு செய்து விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த வருடம் தேசிய வாசிப்பு மாதத்தில் சிறந்த செயற்றிட்டங்களை மேற்கொண்ட நூலகங்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பு இலங்கை மன்ற நிலையத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.22

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக் காக 2015/2016 கல்வியாண் டில் தமிழ் மொழி மூல மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

52 வயதுக்குட்பட்ட கல்விசார் பணியை மேற்கொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவ லர்கள் இந்தக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவராவர்.

இந்தக் கற்கை நெறியானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய வட புலப் பிரதேசங்கள் உள்ளிட்ட பத்து இடங்களில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை உரிய படிவங்களில் நிரப்பி எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மாணவரிடையே செலான் வங்கி நடத்தும் போட்டிகள்

தென்மராட்சி, ஒக்.22

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை இரு கட்டங்களாக நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சித்திரப் போட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

சித்திரப்போட்டியில் தெரிவு செய்யப்படும் சித்திரங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் மாண வர்களுக்கிடையில் சிறுவர் சந்தை, பாண்ட் வாத்தியப் போட்டி, பட்டம் விடும் போட்டி, டெங்கு தொடர்பான தெரு நாடகப் போட்டி ஆகியவற்றை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


**HNB அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

**ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா** ஆகிய கிளைகளில் **28.09.2013** இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் **27.10.2014** தொடக்கம் **31.10.2014 (திங்கள் - வெள்ளி) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை இல.212, 214,** ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியைப் பிற்போடும் மற்றும் ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி.17088) (45:6.3) ஹற்றன் நஷனல் வங்கி


## கைதடி இல்லத்தின் முதியோர்களுக்கு நீரிழிவுப் பரிசோதனை

தென்மராட்சி, ஒக்.22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், கைதடி சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள முதியோர்களுக்கு இரத்தத்தில் குளுக்கோஸின் அளவுப் பரிசோதனையை ஞாயிற்றுக்கிழமை சாந்தி நிலையத்தில் நடத்தினர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் மாவட்டத் தலைவர்களான லயன் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம், லயன் கா. சற்குணதேவன் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள 175 முதியவர்களுக்கு பரிசோதனைகளை நடத்தினர்.

இல்லத்தில் தங்கியுள்ள பெரும்பாலான முதியோர்களுக்கு இரத்தத்தில் குளுக்கோசு உள்ளமை பரிசோதனையில் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குமாறு இல்லப் பொறுப்பதிகாரிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


**VACANCY**

பொறியியலாளர்கள் (Engineers)



வடமாகாணத்திலுள்ள வீதி புனரமைப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டத்திற்காக பொறியியலாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. வதிவிடப் பொறியியலாளர் (Resident Engineer)
குடிசார் பட்டயப் பொறியியலாளர் (Charted Civil Engineer) 12 வருட அநுபவமும், வீதி புனரமைப்பு, குடிதண்ணீர் வழங்கல், கழிவுநீரகற்றல் துறைகளில் முன்னனுபவமும் விரும்பத்தக்கது.

2) மேற்பார்வை பொறியியலாளர் (Site Supervision Engineer)
குடிசார் பொறியிலாளர் (Civil Engineer) 5 வருட அநுபவமும், வீதி புனரமைப்பு, குடிதண்ணீர் வழங்கல், கழிவுநீரகற்றல் துறைகளில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்பும் பொறியியலாளர்கள் தங்களது சுயவிவரங்களை (PO Box 1861) எனும் முகவரிக்கு அல்லது hr@gtc.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: ச.சுதாகர், திட்ட முகாமையாளர்.
077 244 2618



**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவு, சிலாவத்தையில் முல்லைத்தீவு-திருகோணமலை வீதியில் சிலாவத்தை பாடசாலைக்கு எதிரில் 7 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய வசதியான 2 வீடுகள் விற்பனைக்குள்ளன.

தொடர்: 077 605 5559 (53371) (45.6.3)



**JOHN KEELLS FOUNDATION**
**மற்றும்**
**GATEWAY LANGUAGE CENTRE**
GATEWAY Language Centre
**இணைந்து வழங்கும்**
JOHN KEELLS FOUNDATION
**ஆங்கில புலமைப்பரிசில்**
**தெரிவுப் பரீட்சை அனுமதி அட்டை**

மேற்படி கற்கை நெறிக்காக விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களில் தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றவர்களின் பெயர், விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாணவர்களின் விவரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

**பரீட்சை நடைபெறும் இடம் :** கேற்வே
இல.55 ,பருத்தித்துறை வீதி,
நெல்லியடி. (H.N.B முன்பாக)

**காலம்** : 25.10.2014 சனிக்கிழமை
காலை 9.00 மணி

மேலதிக தகவல்களுக்கு :

**GATEWAY**
No. 55, Point Pedro Road, Nelliyady - 021 567 7606

(சி.17087)

# 12 ஆயிரத்து 262 குடும்பங்களுக்கு 2 வருடங்களாக சமுர்த்தி இல்லை

முல்லைதீவு, ஒக் 22

முல்லைதீவு மாவட்டத்தில் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத்தில் இருந்து வழங்கப் பட்டு வரும் சமுர்த்தி நிவார ணம் இரு வருடங்கள் கடந் தும்12 ஆயிரத்து 262 குடும்பங் களுக்கு வழங்கப்பட வில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படு கின்றது.

அந்த வகையில் முல்லைத் தீவு மாவட்டத்தில் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தி லிருந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 412 குடும்பங்க ளுக்கும், புதுக்குடியிருப்பு பிர தேச செயலர் பிரிவில் ஆயி ரத்து 441 குடும்பங்களுக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 593 குடும் பங்களுக்கும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 571 குடும்பங்க ளுக்கும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 950 குடும்பங்களுக்கும், மண லாறு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 70 குடும்பங்க ளுக்கும் சேர்த்து மொத்தமாக 11 ஆயிரத்து 37 குடும் பங்களுக்கு மாதா மாதம் வழங்கப்படும் சமுர்த்தி நிவா ரணம் கிடைக்கப்பெற்று வரு கின்றது.

**சமுர்த்தி நிவா ரணம் வழங்கப்பட்டு இரு வருடங் கள் கடந்தும் இன்றும் 12 ஆயிரத்து 262 குடும்பங் களுக்கு குறித்த நிவாரணம் வழங்கப்படவில்லை.**

இந்நிலையில் சமுர்த்தி நிவா ரணம் வழங்கப்பட்டு இரு வருடங்கள் கடந்தும் இன்றும் 12 ஆயிரத்து 262 குடும்பங் களுக்கு குறித்த நிவாரணம் வழங்கப்படவில்லை.

கரைதுறைப்பற்றில் 3 ஆயி ரத்து 748 குடும்பங்களுக் கும், புதுக்குடியிருப்பில் 6 ஆயிரத்து 365 குடும்பங்க ளுக்கும், ஒட்டுசுட்டானில் ஆயி ரத்து 188 குடும்பங்களுக்கும், துணுக்காயில் 400 குடும் பங்களுக்கும், மாந்தை கிழக் கில் 541 குடும்பங்களுக்கும், மணலாறில் 20 குடும்பங் களுக்கும் சமுர்த்திப் பயனா ளிகள் பட்டியலில் இணைக் கப்பட்டும் இதுவரை சமுர்த்தி நிவாரணம் வழங்காதமை ஏன் எனப் பாதிக்கப்பட்ட மக் கள் கேள்வியெழுப்பியுள் ளனர்.

எனவே இந்தக் குடும்பங்க ளுக்குச் சமுர்த்தி நிவாரணம் வழங்கி வறுமையில் இருந்து மீள உதவுமாறு முல்லைத் தீவு அரச அதிபரை பாதிக்கப்பட்ட மக்கள் கோரி யுள்ளனர். (த-55)

# மாந்தை கிழக்கு வீதிகள் புனரமைப்பின்றி சிரமம்

முல்லைத்தீவு, ஒக் 22

மாந்தை கிழக்கு பிரதேசத்துக் கான பிரதான வீதிகள் எவை யும் புனரமைக்கப்படாமை யினால் போக்குவரத்துக்கள் தடைப்படும் நிலை காணப்படு கின்றது.

மாந்தை கிழக்கு மூன்று முறிப்பு, பனங்காமம், நட்டாங் கண்டல், கரும்புள்ளியான் உள்ளிட்ட பகுதிகள்க்குச் செல் லும் பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்பட்டாமல் குண் டும் குழியுமாகக் காணப்படு கின்றது. குறித்த கிராமங் களுக்கான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் நீர்ப்பாசனத் திணைக்களத் துக்கு ஒரு பகுதியும் வீதி அபிவிருத்தி திணைக்களத் துக்கு ஒரு பகுதியும் பிரதேச சபைக்கு ஒரு பகுதியுமா கக் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

குறித்த மூன்று திணைக் களங்களும் குறித்த பிரதான வீதியைப் புனரமைத்து கொள் வதன் மூலம் போக்குவரத்து வசதிகள் சீராக இடம்பெறும் என்றும் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந் தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (த-55)

# மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு


யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். மாவட்டச் செயலகத்தின் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களப் பிரிவினால் யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழிற் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு எதிர் வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொழிற்சந்தை நிகழ் வில் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வெற்றிடங்க ளுக்கான ஆளணியின ரைத் தேர்வு செய்வதற்காக அரச தனியார் துறையின ரைச் சேர்ந்த வேலைவாய்ப்பு நிறுவ னங்கள், தொழிற் பயிற்சி அதிகார சபை (வி.ரி.ஏ.) உயர் தொழில்நுட்ப நிறு வனம் (ஏ.ரி.ஐ.), கார்கில்ஸ், காப்புறு தித்துறை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பாதுகாப்பு சேவை நிறுவனங்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு நிறு வனங்கள், நிதி நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், கணினி நிறுவனங்கள் மற் றும் உள்ளூர் உற்பத்தி நிறுவ னங்கள் வருகை தரவுள் ளன.

தொழில் வாய்ப்புக்காக காத் திருக்கும் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உரிய நேரத்தில் தங்கள் சுயவிவரக் கோவை மற்றும் ஆவணங்களுடன் பங்குபற்றி பொருத்தமான வேலை வாய்ப்புக்கள், தொழிற்பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்று பயனடையுமாறும் இந்தச் சேவையினூடாக ஆளணி யினரை பெற்றுக் கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற் றும் மேலதிக விவரங்கள் பெற விரும்புபவர்கள் 021-221 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறும் யாழ் மாவட்ட அரச அதி பர் சுந்தரம் அருமைநா யகம் தெரிவித்துள்ளார். (த-10)

# ஓமந்தையில் ரயிலிலும் சோதனை



கிளிநொச்சி, ஒக் 21

வவுனியா ஓமந்தையில் ரயிலில் பயணிக்கும் பயணி களை இராணுவத்தினர் சோத னையிடுவதன் காரணமாக இடர்களை எதிர்கொள்வ தாகப் பயணிகளால் தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த 18 ஆம் திகதி அதி காலை 3.00 மணியளவில் ஓமந்தையில் ரயிலில் பய ணித்தவர்களைச் சோதனை செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டதன் காரணமாக ஒரு மணித் தியாலம் வரை பயணிகள் இடர்களை எதிர்கொண்டுள் ளதாகவும், ஓமந்தைச் சாவடி யில் பஸ்ஸில் ஏறி அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கும் படையினர் ரயிலில் பயணிக் கும் பயணிகளின் பயணப் பொதிகளை இறக்கிச் சோத னையிட்டமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது. (த-18)




## பனம்பழத்தில் இருந்து பனங்களி பெறும் பயிற்சிநெறி கைதடியில்

யாழ்ப்பாணம், ஒக் 22
கைதடியில் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையத்தில் பனம் பழத்தில் இருந்து பனம் களியை எவ்வாறு பெறுவது, பாதுகாப்பது என்பது தொடர்பான பயிற்சி ஒன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டதாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 வரையான பயனாளிகளுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி தொடர்ந்து கட்டம் கட்டமாக வழங்கப் படும். பனம் பழத்தில் இருந்து பனம் களியை எவ்வாறு பெறுவது, அதனை எவ்வாறு நீண்ட நாள்களுக்குப் பாதுகாப்பான முறையில் பேணிக் காப்பது போன்றவை தொடர்பாக இதன் போது பயிற்சியளிக்கப்பட்டது.
பனம் பழக் காலத்தில் பனம் களியைக் கூடுதலாகப் பெற்று அதனை நீண்ட நாள்களுக்குப் பாதுகாப்பதற்குப் பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது
சேமித்துப் பாதுகாக்கப்படும் பனம் களியைக் கொண்டு பனம் பண்டங்களைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (த-17)


## அச்சுவேலி வைத்தியசாலையின் உள்ளகத் தொலைபேசிகள் பழுது

அச்சுவேலி, ஒக்.22
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் உள்ளகத் தொலைபேசி இணைப்பு வசதிகள் முற்றாகச் செயல் இழந்த நிலையில் இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் என்பன பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையீடு செய்த போதிலும் நிலைமை சீர்செய்யப் படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் உள்ளகத் தொலைபேசி இணைப்புக்கான சாதனம் கடந்த சில மாதங்களுக்கு மேலாகச் செயலிழந்த நிலையில் உள்ளது. இந்தக் கருவியை திருத்தி அமைப்பதற்கு உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இன்று வரை அது சீர் செய்யப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.
உள்ளகத்தொலைபேசி இணைப்பு செயலிழந்திருப்பதால் நோயாளர் விடுதிகளுடனான தொடர்பு மற்றும் நிர்வாக அலகுகளுடனான தொடர்புகளை ஏற் படுத்த முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.
இதனால் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (த-11)

# யாழ். வசந்தபுரம் கிராம மக்கள் ஓட்டைக் குடிசைகளில் அவலம்

## மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் பெரும் இன்னல்களுடன் வாழ்க்கை

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்.பிரதேச செயலர் பிரிவில், வசந்தபுரம் பகுதி மக்கள் வீட்டுத் திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள் இன்றிப் பாதிக்கப் பட்டுள்ளனர். வீட்டுத்திட்டம் இன்றி மக்களில் சிலர் தங்களது ஓட்டைக் குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.
இந்தப் பிரதேசத்தில் 165 குடும்பங்கள் வரை வசித்து வரும் நிலையில் அவர்களுக்கான தேவைகள் எதுவொன்றும் இதுவரை அரசினால் நிறைவேற்றிக் கொடுக்கப்படவில்லை என்று விசனம் வெளியிடப் பட்டுள்ளது.
கடந்த பல வருடங்களாகத் தற்காலிக குடிசைகளில் தாம் வாழ்ந்து வருவதாகவும், தமக்கு வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் கூறுகின்றனர்.
அத்துடன் தாம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதியில் வாழ்ந்து வருவதால் தமக்குக் காணி உறுதியைப் பெற்றுத் தருமாறு கோரியும் இது வரை அது குறித்து நடவடிக்கை எதுவும் இல்லை என்கிறார்கள் அவர்கள்.



மழை வெள்ளத்தில் நிலம் ஊறிய குடிசை ஒன்று

சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்கள் மற்றும் கிராம சேவகர்களிடம் தமக்குரிய அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தும் அவையும் பயனளிக்கவில்லை என்று கூறுகிறார்கள் அந்த மக்கள்.
அத்துடன் அரசியல்வாதிகளும் தேர்தல் காலத்தில் மட்டும் வாக்குக் கேட்டு எமது பிரதேசங்களுக்கு வருவார்கள். எங்கள் தேவைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்து விட்டுச் செல்வார்கள். அத்துடன் அது முடிந்து போகும். வாக்குறுதிகள் எவையுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் கடும் மழை பெய்யும் பட்சத்தில் இந்தக் கொட்டகைகளில் தொடர்ந்து வாழ முடியாத நிலைமையே ஏற்படும். கடும் மழை பெய்தால் வெள்ளம் குடிசைகளை நிரப்பிவிடும். மாரி காலத்தில் குடிசைகளில் படுத்துறங்க முடியாத நிலையில் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாக அவர்கள் குறிப்பிட்டனர். (த-17)

## அநுராதபுரம் பரிசாரகர்கள் பருத்தித்துறைக்கு பயணம்

வடமராட்சி, ஒக் 22
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 5 எஸ் நிர்வாக நடைமுறையை அநுராதபுர மாவட்ட வைத்தியசாலை பரிசாரக பயிற்சியாளர்கள் நேரில் பார்வையிட்டு விளக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.
அநுராதபுரம் மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் 50 பேருக்கு மேற்பட்டோர் பரிசாரகர் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.
அவர்களின் பயிற்சியின் நிறைவாக மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பயிற்சியின் ஓர் அங்கமாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்து வைத்தியசாலை நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டனர்.
இவர்களுக்கு வைத்தியசாலை சிரேஷ்ட தாதியப் போதனாசிரியர்கள் போதிய விளக்கங்களை வழங்கினார்கள்.
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-173)



தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட முன்பள்ளிகளின் சர்வதேச சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளிகளின் ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.குகனேசன், அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஓய்வு பெற்ற உப அதிபர் எம்.பத்மாநாதன், சிலிங்கோ நிறுவனத்தின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ஜெயராசா நவநீதன் ஆகியோர் பங்கேற்றனர். முன்பள்ளிச் சிறுவர்களும் ஆசிரியர்களும் மாலை அணிவித்து பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (த-86)

## 58 முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம், ஒக்.22
வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சு தீவக வலயத்தில் உள்ள 58 முன்பள்ளிகளுக்கு கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கென மூலதன நன் கொடையாக உறுப்பினர்களது அபிவிருத்தித் திட்ட முன் மொழிவில் ரூபா 16 லட்சத்து 25 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-9)

## வடமராட்சி கிழக்குக் கடல் கொந்தளிப்பான நிலையில்

யாழ்ப்பாணம், ஒக்.22
வடமராட்சி கிழக்குக் கடற்பகுதி கொந்தளிப்பாகக் காணப்படுவதால் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளனர்.
கடந்த இரு நாள்களாகக் கடல் கொந்தளிப்பு சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது.
சுண்டிக்குளம் தொடக்கம் முனை வரையான கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியைக் குறைத்துள்ளனர்.
தற்போதைய சீரற்ற கால நிலை, கடற்கொந்தளிப்பு போன்ற காரணங்களால் மீனவர்களின் மீன்பிடியும் வடமராட்சி கிழக்குக் கடற் பகுதியில் குறைந்து காணப் படுவதாகத் தெரிவிக்கப்பட் டது.
இதன் காரணமாக வடமராட்சி கிழக்குக் பகுதிகளிலிருந்து கடலுணவுகள் யாழ். நகருக்கு குறைவாகவே வந்து சேர்கின்றன. (த-17)

# வாழ்வின் எழுச்சிக் கலந்துரையாடலில் அரச அதிகாரிகள்-மக்கள் வாக்குவாதம்

தென்மராட்சி,ஒக்.22
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கான கலந்துரையாடலில் பொதுமக்களுக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் மக்கள் கலந்துரையாடலைப் புறக்கணித்து அங்கிருந்து வெளியேறினர்.
இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்து 95 பேர் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்த உதவித் திட்டத்தின் கீழ் என்னென்ன உதவிகள் தேவையென இனங் காண்பதற்காக நேற்று முன் தினம் பிரதேச செயலகத்தில் கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு என்னென்ன உதவித் திட்டங்கள் தேவையெனக் கேட்டபோது, மக்கள் தமக்கு உதவிப் பொருள்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையைப் பணமாகத் தருமாறு கோரியுள்ளனர்.
அதற்கு அதிகாரிகள் மறுப்புத் தெரிவிக்கவே மக்கள் தமக்கு ஒன்றும் வேண்டாமெனக் கூறி வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக பிரதேச செயலக அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வாழ்வாதாரத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 95 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டு மாடு, ஆடு, கோழி ஆகியவை கொள்வனவு செய்து வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.
இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்களை வரவழைத்து அவர்களின் தேவை குறித்து கேட்கப்பட்டது. அவர்கள் தமக்கு பொருள்கள் வேண்டாம். பணமாகத் தருமாறு கேட்டனர். வாழ்வாதார உதவியாகப் பொருள்கள் வாங்கிக் கொடுக்க முடியும். பணமாகக் வழங்க முடியாது. விரும்பிய இடத்தில் கோழிகளை வாங்கி விட்டு எமக்கு அறிவியுங்கள்.
உரிய தொகையை அவர்களுக்கு வழ்ங்குகின்றோம் எனக் கூறிய போதிலும் மக்கள் அவற்றைச் செவி மடுக்காமல் செயலகத்தில் இருந்து வெளியேறினர்-எனத் தெரிவித்தார். (த-9)

# குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கு வீட்டுத் தோட்டம் மிக முக்கியம்

## வாழ்வின் எழுச்சி நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர்

கிளிநொச்சி, ஒக். 22

எமது பொருளாதார மேம்பாட்டுக்கும் எமது குடும்பத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் வீட்டுத்தோட்ட செய்கை மிக முக்கியமானது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலான வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான நிகழ்வு நேற்று முன் தினம் முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், நாடளாவிய ரீதியில் நடைபெறும் இந்த நிகழ்வானது, எமது மாட்டவத்தில் நான்காவது தடவையாக நடைபெறுகின்றது.

'நிறைவான இல்லம்' வளமான தாயகம் என்ற அடிப்படையில் வாழ்வின் எழுச்சி வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம் நடைபெறுகின்றது.

எங்களுடைய இல்லங்கள் நிறைவானதாக அமையப் பொருளாதாரத்திலும் போஷாக்கிலும் நிறைவானவர்களாக நாம் இருக்க வேண்டும்-என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சுமார் 7 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்கான மரக்கறிப் பயிர்கள் மற்றும் பழப்பயிர்கள் வழங்கப்பட்டன. (கு-55)



அரச அதிபர் மரம் நடுகிறார்

# பெண்ணின் கையை இழுத்த பொலிஸார்

*மன்னார் பஸ் நிலையத்தில் பரபரப்பு*



மன்னார், ஒக். 22

மன்னார் தனியார் பஸ் நிலையத்தில் சிவில் உடையில் நின்ற புலனாய்வு பிரிவுப் பொலிஸாரொருவர் பெண்ணொருவரின் கையைப் பிடித்து இழுத்தார் என்று தெரிவித்து அப்பகுதி மக்கள் கூடி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் தனியார் பஸ் நிலையத்தில் அமைந் துள்ள உணவகங்களில் மன்னார் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இலவசமாகவே உணவு, புகைப்பொருள்களை கோரிக் கெடுபிடியில் ஈடுபடுவர் என்றும், அவர்களுக்குப் பயந்து தாம் இலவசமாகவே அந்தப் பொருள்களை வழங்குவதென்றும் கடைக்காரர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு குறித்த கடையொன்றில் சிகரெட் தருமாறு கோரிய பொலிஸ் புலனாய்வாளர் ஒருவரிடம் அந்தத் தினத்தில் கடையில் நின்றவர் பணம் கோரியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பொலிஸார், 21 வயது நிரம்பாத ஒருவரைக் குறித்த கடையில் சிகரெட் வாங்கி வருமாறு அனுப்பிக் கடை உரிமையாளர் மீது வழக்கு தொடர முற்பட்டுள்ளனர்.

சம்பவ தினத்தன்று கடையில் கடை உரிமையாளரின் மனைவியே நின்றுள்ளார். இதனால் சம்பவம் குறித்து அவர் தனது கணவருக்குத் தெரியப்படுத்தியதும் அங்கு வந்த கணவர் தனது பெயரிலே கடையுள்ளது.

என் மீது வழக்குத் தொடரலாம். மனைவியின் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்று கோரியுள்ளார். அதை மறுத்த பொலிஸார், குறித்த பெண் வீட்டுக்குப் புறப்பட்டபோது பொது இடத்தில் அவரது கையைப் பிடித்து மறித்து தகராறில் ஈடுபட்டனர் என்று கூறி அப்பகுதி கடையுரிமையாளர்கள், சம்பவத்தை அவதானித்த பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனை அடுத்து அப்பகுதியில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது. உணவகத்தின் உரிமையாளர் குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை - கடை உரிமையாளருக்கு எதிராக சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தார் என்ற வழக்கொன்றும் மன்னார் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. (கு)

# முயற்சியாண்மையாளரின் கண்காட்சி வவுனியாவில்



வவுனியா, ஒக் 21

மாகாணங்களுக்கிடையில் முயற்சியாண்மையாளர்களின் செயற்பாட்டை பரிமாற்றம் செய்யும் முகமாக மாபெரும் கண்காட்சி ஒன்று வவுனியா நகரசபை வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

வடக்கிலுள்ள முயற்சியாண்மையாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு யு.எஸ். எயிட் அமைப்பின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தின் சிறு முயற்சியாண்மையாளர் அபிவிருத்தியை மேம்படுத் தல் திட்டத்தின் கீழ் இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப் பட்டது.

பல்வேறுபட்ட துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் கொள்முதல் செய்வோர், விநியோகம் செய்வோர் மற்றும் சேவை வழங்குநர்கள் இடையே பெறுமதியான தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இது இடம்பெற்றது.

இதில் வடமாகாண, மத்திய மாகாண முயற்சியாண்மையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வேலைப்பாடுகள் கொண்ட உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப் பட்டன. (கு)

# சிவில் பாதுகாப்புப் படையின் 2 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

கிளிநொச்சி, ஒக் 22

சிவில் பாதுகாப்பு படையினரின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் கிளிநொச்சி புன்னைநீராவியில் அமைந்துள்ள கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் செயற்பட்டு வரும் சிவில் பாதுகாப்புப் படையினரின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி புன்னைநீராவியில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவில் பாதுகாப்புப் படையணியின் தலைமை அதிகாரி றியஸ் அட்மிரல் ஆனந்த பீரிஸ் கலந்து கொண்டு இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி அமைக்கப் பட்ட புதிய விடுதிகள் இரண்டைத் திறந்து வைத்ததுடன் சிவில் பாதுகாப்பு படைப் பிரிவில் இரு வருடம் சேவையாற்றிய பணியாளர்களுக்கான சைக்கிள்களையும், புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.



இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்புப் படையணியின் கீழ் இயங்கி வரும் முன்பள்ளி ஆசிரியர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கு-55)

# மிகக்குறைந்த மாணவரே சித்தி

முல்லைத்தீவு, ஒக். 22

இந்தவருடம் நடைபெற்று முடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மிகக் குறைவான மாணவர்களே சித்தி அடைந்துள்ளனர் என பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

ஏனைய பாடசாலைகளோடு ஒப்பிடும்போது ஆசிரியர் வளங்கள் உட்பட சகல வளங்களும் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேசப் பாடசாலைகளில் எதிர்பார்த்த அளவு மாணவர்கள் சித்தியடையவில்லை. இதற்கான காரணம் தெரியவில்லை எனவும் அவர்கள் கூறினர். (கு-560)



வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் மரம் நடுகை முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்றது. இதில் வலயக் கல்விப் பணிப்பாளரும், வலயகல்விப் பணிமனை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு மரக் கன்றுகளை நடுகை செய்தனர். (கு-433)

# நயினாமடுப் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

வவுனியா, ஒக். 22

வவுனியா வடக்கு நயினாமடு பகுதியில் அண்மை நாள்களாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரத்துக்குள் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், தொடர்ந்தும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து வருவதாகவும் மக்கள் அச்சத்துடன் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி பகுதியில் உள்ள சுப்பையா செல்வரத்தினம் என்பவரின் வீட்டுக்குச் சென்று அங்கு இருந்தவர்களை அச்சுறுத்தியும் அவருடைய மகனான செல்வராஜா ஆனந்தராஜாவைத் தாக்கியும் அவரிடம் இருந்த பெறுமதியான மோதிரத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இதே இடத்தில் கடந்த இரு வாரத்துக்கு முன் இன்னொரு வீட்டுக்குச் சென்று அங்கிருந்தவரைத் தாக்கிவெட்டி அவரிடம் இருந்த பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். (கு-421)

# தற்போது தேர்தலை நடத்தவே முடியாது

## சரத் என் சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது தேர்தலை நடத்த முடியாது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.



மஹிந்தவுக்கு மூன்றாம் தவணை முடியாது என்ற தலைப்பில் மாத்தளை சணச அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்புக்கு அமைவாக எந்தவொரு மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி தேர்தலை தற்போதைக்கு நடத்த அவகாசம் கிடையாது. எனக்கு தெரியாது மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்களம் வாசிக்க தெரியுமா என்று. தேவையென்றால் நீதிமன்றம் செல்லவும் தயார். அங்கு நான் நியமித்த நீதிவான்களே கடமையாற்றுகின்றனர். தற்போதைக்கு ஜனாதிபதி தேர்தல் நடத்தக்கூடாது என்பதனை தெளிவான சட்ட வாதங்களுடனேயே முன்வைக்கின்றோம்.


மிகத் தெளிவான ஓர் அரசமைப்பு ஒன்றை உருவாக்கி வருகின்றோம். விரைவில் அந்த அரசமைப்புக்கு 19ஆம் திருத்தச் சட்டம் என பெயரிடப்படவுள்ளது. விரைவில் இந்த உத்தேச சட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. ஜனாதிபதியால் இப்போதைக்கு தேர்தல் நடத்த அரசமைப்பின் பிரகாரம் அனுமதி கிடையாது"- என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற)

# ஞானசார தேரருக்கு பிணை அனுமதி

## கோட்டை நீதிவான் நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, ஒக்.22

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு அருகில் சட்டத்தரணி மைத்திரி குணரட்னவை திட்டினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



ஞானசார தேரரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

மைத்திரி குணரட்ன மற்றும் கொம்பனித் தெரு பொலிஸில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை தவிர, ஞானசார தேரர் புனித குர்ஆனை அவமதித்தமை, ஜாதிக பல சேனா அமைப்பின் ஊடக சந்திப்புக்குள் புகுந்து குழப்பியமை ஆகிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளும் நேற்று நடைபெற்றன.

வழக்கில் முன்னிலையான கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சம்பவங்கள் தொடர்பான காணொலிகள் ஆய்வுகளுக்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும், ஆய்வு அறிக்கைகள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவம் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளும் கோரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர். அதையடுத்து ஞானசார தேரருக்கு நீதிவான் பிணை அனுமதி வழங்கினார். (ற)

# ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு புதிய விமானங்கள்

கொழும்பு, ஒக்.22

ஸ்ரீலங்கன் விமான சேவையை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் ஏ 330 - 300 ரக ஆறு விமானங்களை கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்த நிலையில் முதலாவது விமானம் இந்த மாத இறுதிக்குள் இலங்கையை வந்தடைய உள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு மேலும் விமானங்கள் தருவிப்பது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி, 9 விமானங்கள் தருவிக்கப்பட உள்ளதோடு இவை எந்த வகையில் தருவிப்பது என்பது குறித்து அமைச்சர் அமைச்சரவைக்கு விளக்கியுள்ளார். ஏ-330 - 300 ரக ஆறு விமானங்கள் 2014 - 2015 காலப் பகுதியினுள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டிலும் மேலும் மூன்று ஏ 350 - 900 ரக விமானங்களை குத்தகை அடிப்படையில் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற)

# மிக வெறுப்படைந்த நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சர்

## அமைச்சுப் பதவியை விட்டு விலக எண்ணியுள்ளதாகவும் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.22

மிகவும் வெறுப்படைந்துள்ளேன் என்று தெரிவித்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, தான் அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.



"எனக்கு இந்த அமைச்சு பதவியில் இருந்து விலக முடிந்தால், விலகி விடுவேன். அந்தளவுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் விலகினால், அரசில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக விலகி விட்டதாக எண்ணுவார்கள்.

விளையாட்டுத்துறையை மேம்படுத்த மேற்கொண்ட சிரமத்தையும் முயற்சிகளையும் பெற்றுள்ள பிரதிபலன்களையும் பார்க்கும்போது இவர்களுடன் பணியாற்றுவதை விட விட்டுச் செல்வது சிறந்தது என்ற எண்ணம் ஏற்படுகிறது. முடிந்தால் செய்ய வேண்டும். முடியாது போனால் நான் கைவிட்டுச் சென்று விடுவேன்"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை மெய்வல்லுநர் அணி சிறப்பாக விளையாடாமை, விளையாட்டு நிர்வாகத்துறையில் மோதலான நிலைமைகள் காரணமாக அமைச்சர் வெறுப்பில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் விளையாட்டுத்துறையில் கடந்த காலங்களில் பெரும் அரசியல் அழுத்தங்கள் ஏற்பட்டன. இதனால், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட வீரர்கள் கடும் அதிருப்திக்கு உள்ளானதுடன் விளையாட்டுத்துறையை விட்டு விலகிச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டிருந்தது. (ற)

# ரணில் சிங்கப்பூர் பயணம்

கொழும்பு, ஒக்.22



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் பயணம் மேற் கொண்டு சிங்கப்பூருக்கு சென்றுள்ளார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. அதேவேளை அவர் பயணத்தை முடித்துக் கொண்டு நாளை வியாழக்கிழமை நாடு திரும்பவுள்ளளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஓரம்கட்டப்படுகின்றார் நிமால்

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைப் பணிகளில் இருந்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஓரம் கட்டப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



ஜனாதிபதி தேர்தலுக்கான பதுளை மாவட்ட ஆளும் கட்சி ஒழுங்கமைப்பு பணிகள், கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வாவுக்கு வழங்கப்படவில்லை.

மாறாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவி சீனி அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட லக்ஸ்மன் செனவிரட்னவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பான பதுளை மாவட்ட ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவராக லக்ஸ்மன் செனவிரட்ன அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் இந்த நியமனத்திற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். கட்சியின் பிரதேச மட்டத்திலான சிரேஷ்ட தலைவர்கள் பலரும் கூட இந்த நியமனத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்கு அதிகளவு செல்வாக்கு காணப்படுவதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பின்னடைவை எதிர் நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு மற்றும் பரப்புரைப் பணிகளுக்கு நிமால் சிறிபால டி சில்வா பொறுப்பாகவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

The Hands that Protect
LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

தீபாவளி நல்வாழ்த்துகள்
மணி பிளஸ் (Money Plus).

(உத்தரவாதமளிக்கப்பட்ட ஆண்டொன்றுக்கு 12% மீளளிப்பு [முதிர்ச்சியில்])

தனிக் கட்டுப்பணக் கொடுப்பனவு மூலம் 5 வருட காலத்தைக் கொண்ட ஆண்டொன்றுக்கு 12% உத்தரவாதமளிக்கப்பட்ட மீளளிப்பு திட்டமாகும். இது குறித்த காப்புறுதிதாரர் காப்புறுதி காலம் முடியும்வரை உயிருடன் இருந்தால், முதிர்ச்சியில் அவருக்கான கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்றது.



**தகைமை நிபந்தனைகள்**

அனுமதிக்கப்படும் குறைந்த வயது : 18 வருடங்கள்
அனுமதிக்கப்படும் போதான உச்ச வயது : 55 வருடங்கள்
முதிர்ச்சியின் போதான உச்ச வயது : 60 வருடங்கள்
காப்புறுதிக்காலம் : 05 வருடங்கள்
தவணைக் கொடுப்பனவு முறைமை : தனிக்கட்டுப்பணம்

**குறைந்த தனிக்கட்டுப்பணம்**




18 – 45 வயது : ரூபா 21.000
46 – 55 வயது : ரூபா 23.000
**கட்டுப்பண உச்சவரம்பு எல்லை கிடையாது.**
முதலீட்டு தொகையை ஒவ்வொரு 1000 ரூபாய்களால் அதிகரிக்க முடியும்

**அனுகூலங்கள்**

| தனிக்கட்டுப்பணக் கட்டணம் (ரூபா) | முதிர்ச்சிப் பெறுமானம் (ரூபா) | காப்புறுதியின் முதல் 4 வருடங்களில் இறப்பு நேரிடின் | காப்புறுதியின் 5ஆம் வருடத்தில் இறப்பு நிகழ நேரிடின் |
|---|---|---|---|
| 25,000 | 40,000 | 37,500 | 40,000 |
| 50,000 | 80,000 | 75,000 | 80,000 |
| 75,000 | 1,20,000 | 1,12,500 | 1,20,000 |
| 1,00,000 | 1,60,000 | 1,50,000 | 1,60,000 |
| 2,00,000 | 3,20,000 | 3,00,000 | 3,20,000 |

• தேவைப்படின் கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

LIC Life Insurance Corporation (Lanka) Ltd.
29/2, Visaka Road, Col - 04 Sri lanka.
Tel.011 2552277, 011 2553577
Fax No. 011 2590495
Website : www.liclanka.com


அன்பின் நாதம் உலகெங்கும் ஒலிக்கட்டும்...
இதய தீபம் நாடெங்கும் ஒளிரட்டும்...
ஒலியும், ஒளியும் உறவுகளுடன் உறவாடும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள் மொபிடெலிடமிருந்து!
Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

## ஜிலாக்ஸா வாசியுங்க

ஒரு வங்கியில் கொள்ளை அடிக்கும் பொழுது கொள்ளைக்காரன் "யாரும் நகராதீர்கள், பணம் நாட்டின் உடையது. உங்கள் உயிர் உங்களுடையது" என்றான். எனவே அனைவரும் அமைதியாக இருந்தனர்.
இது தான் 'மனம் மாற்றும் கருத்து'.
ஒரு பெண் மேசையில் படுத்திருந்தாள். ஒரு கொள்ளைக்காரன் "நாங்கள் கற்பழிக்க வரவில்லை கொள்ளையடிக்க வந்திருக்கிறோம். ஒழுங்காய் கீழே இரு" என்றான்.
இது தான் "தொழில் முறை யுக்தி", கவனம் சிதறாமல் இருப்பதற்கு.
கொள்ளையடித்து விட்டு வீட்டுக்கு திரும்பும் போது ஒருவன் கேட்டான் "எவ்வளவு பணம் இருக்கின்றது என்று எண்ணுவோம்", இன்னொருவன் அட முட்டாளே, தொலைக்காட்சி செய்தியில போடுவாங்கள். அதில் பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.
இது தான் 'அனுபவம்' என்பது, திறமைகளை விட பெரியது.
அவர்கள் கொள்ளை அடித்து சென்ற பிறகு வங்கி முகாமையாளர். ஊழியரிடம் பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள் என்றார். ஆனால் ஊழியர் "நாம் ஒரு 10 கோடி எடுத்துவிட்டு. மொத்தம் 50 கோடி என்று கணக்கு சொல்லிடலாம்" என்றான். இது தான் 'அலைகளை நோக்கி நீந்து' என்பது.
அதை கேட்டு முகாமையாளர் சொன்னார், "மாதா மாதம் கொள்ளை நடந்தால் நல்லா இருக்கும்"
இது தான் 'அலுப்பின் வெறுப்பு'. வேலையை விட சொந்த சந்தோசம் தான் முக்கியம் இவாகளுக்கு.



மறுநாள் தொலைக்காட்சியில் 100 கோடி கொள்ளை அடிக்கப்பட்டது என்று செய்தி வந்தது. அந்த கொள்ளைக்காரன் ஆக்ரோஷத்துடன் "நாங்கள் உயிரைப் பணயம் வைத்து 30 கோடி தான் கொள்ளை அடித்தோம். ஆனால் அவர்கள் 70 கோடி கொள்ளை அடித்துவிட்டனர். கொள்ளை அடித்தவனை விட படித்தவனே மிக கேவலமாக நடந்து கொள்கிறான்"
இதுவே 'அறிவு தங்கத்துக்கு நிகரானது' என்று சொல்லப்படுகிறது. அந்த வங்கி முகாமையாளர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். கொள்ளை சம்பவத்தால் தான் இழந்த பங்கு சந்தையை மீட்டார். இது தான் "வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வது".
இப்பொழுது சொல்லுங்கள். இதில் யார் உண்மையான கொள்ளைக்காரன் ??



## தங்கைக்காக ஸ்ருதி பாட்டு

கமலஹாசனின் இளையமகள் அக்ஷரா ஹாசன், சமிதாப் என்ற ஹிந்திப் படத்தின் மூலம் அறிமுகமாகிறார். அமிதாப் பச்சன், தனுஷ், ரேகா நடிக்கிறார்கள். பால்கி இயக்குகிறார். இளையராஜா இசை அமைக்கிறார். பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார்.
இந்தப் படத்தில் தங்கை அக்ஷரா ஹாசனுக்காக அக்கா ஸ்ருதி ஹாசன் ஒரு பாடல் பாடுகிறார். இளையராஜா இசையில் அவர் ஹிந்துஸ்தானி பாடல் ஒன்றை பாடுகிறார். ஸ்ருதி முறைப்படி ஹிந்துஸ்தானி இசை கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டப்பிங் சின்னத்திரை தொடர்களுக்கு முற்றுப்புள்ளி



அண்மையில் நடந்த சின்னத்திரை நடிகர்கள் சங்கத் தேர்தலில் நளினி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது பதவிக் காலத்தில் பல நல்ல திட்டங்களை செயல்படுத்த அவர் முடிவு செய்திருக்கிறார்.
இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:-
சின்னத்திரை நடிகர்கள் சங்கத்தில் பெண்கள்தான் அதிக அளவில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதனால் ஒரு பெண் தலைவராக வந்தால் நன்றாக இருக்கும் என்று என்னைத் தேர்வு செய்திருக்கிறார்கள். நானும் என்னால் முடிந்த பல திட்டங்களை செயல்படுத்த இருக்கிறேன். சங்கத்திற்கென்று சொந்தக் கட்டடம் வாங்க முயற்சிப்பேன். இதற்கு எப்படி நிதி திரட்டலாம் என்று யோசித்து வருகிறேன். எங்கள் சங்க உறுப்பினர்கள் பலர் வேலையின்றி இருக்கிறார்கள். இந்த நிலையில் பல அலைவரிசைகள் ஹிந்தி, கொரியன், ஜப்பானிய தொடர்களை டப் செய்து ஒளிபரப்புகிறது. இதனால் எங்கள் வேலை வாய்ப்பு பறிபோகிறது. இது குறித்து தொலைக்காட்சி நிறுவனங்களுடன் பேச இருக்கிறேன்.
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை வேலை செய்தால் ஒன்றரை நாள் கால்ஷீட்டாக கணக்கில் கொள்ள வேண்டும் என்ற தயாரிப்பாளர்களை வற்புறுத்த இருக்கிறேன் என்கிறார் நளினி.






## 9ஆவது மாடியில் இருந்து விழுந்தது குழந்தை

பிரான்ஸில் 4 வயதுக் குழந்தை ஒன்று 9 ஆவது மாடியிலிருந்து விழுந்து உயிர் தப்பியுள்ளமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.
பிரான்ஸின் மத்திய பகுதியான சையிண்ட் எடின் நகரை சேர்ந்த 4 வயதுக் குழந்தை ஒன்று 25 அடி உயரம் கொண்ட 9 ஆவது மாடியிலிருந்து கிழே விழுந்துள்ளது.
குழந்தையின் தாயார் குழந்தையை வீட்டில் தனியாக விட்டு கடைக்குச் சென்றபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஆனால் குழந்தை செடிகளின் இடையில் விழுந்ததால் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளது.
தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைக்கு தலையில் காயங்களும், எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளதாகவும், விரைவில் பழைய நிலைக்கு மீண்டும் திரும்பும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பாசப் போராட்டம்

துபாயில் எஜமானுக்கும் செல்லப் பிராணிக்கும் இடையிலான பாசப்போராட்டம் பலரை நெகிழ வைத்துள்ளது.
ஜேம்ஸ் வாட்தன் என்ற 73 வயது முதியவர் உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ச்சியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.
ஆனாலும் உடல் நிலை முன்னேற்றமில்லை. சரியாக சாப்பிடுவது மில்லை. அவரின் செல்ல பிராணியான ஒற்றைக் கண் நாயை பிரிந்திருப்பதே அவரின் மன உளைச்சலுக்குக் காரணம் என்பதை மருத்துவமனையில் அறிந்து கொண்டனர். மருத்துவமனைக்குள் செல்லப் பிராணிகளுக்கு அனுமதி இல்லை என்றாலும், அவரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு சிறப்பு அனுமதியோடு நாயை அவரின்அறைக்குகொண்டு வந்தனர்.



முதியவரைக் கண்ட நாயும் அவர் மீது துள்ளி குதித்து அவர் மேல் புரண்டு விளையாடியது. முதியவரின் கண்களில் மகிழ்ச்சியோடு கண்ணீர் பெருக்கெடுத்தது. இரு உயிர்களின் அன்பில் அறையில் நிசப்தம் நிலவியது. உரிமையாளரான முதியவரை பிரிந்ததிலிருந்து நாயும் சாப்பிடவில்லை என்ற செய்தி அங்குள்ளர்வர்களை ஆச்சரியப்பட வைத்தது.
தற்போது முதியவர் நன்றாக சாப்பிடுவதாகவும், உடல் நிலை தேறி வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெளிநாட்டவர் வருகைக்கான தடையின் பின்னணியில் சதியா?

உலகத் தொடர்பில் இருந்து வடக்கு மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு அப்பால் செல்வதற்கு வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு மூலம் கொழும்பு அரசு இதனைச் சாதித்திருக்கிறது.

இந்தக் கட்டுப்பாடு மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பஸ்கள் மற்றும் வாகனங்களில் வரும் வெளிநாட்டவர்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியிலும் ரயில் மூலம் வருபவர்கள் ஓமந்தை ரயில் நிலையத்திலும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுத் தடுக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்ட பிரதிநிதிகூட அண்மையில் இவ்வாறு ஓமந்தையில் தடுக்கப்பட்டார்.

போர்க் காலங்களிலும் இதுபோன்ற தடை இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. சர்வதேச பத்திரிகையாளர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் வடக்கு கிழக்குப் பகுதிகள் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாகவே இருந்தன. இறுதிப்போரின்போது பெருமளவு மனித உரிமை மீறல்களும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களும் இடம்பெறுவதற்கு வெளி உலகத்திடம் இருந்து வடக்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்ததும் ஒரு மிக முக்கிய காரணம்.

இப்போது மீண்டும் அவ்வாறானதொரு கட்டுப்பாடு - தடை - ஏற்படுத்தப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. உலக நாடுகளிடம் இருந்து வடக்கைத் தனிமைப்படுத்தும் கொழும்பு அரசின் நோக்கம் என்ன என்பது கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டவர்கள் சிலர் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்வதே புதிய கட்டுப்பாட்டுக்கான காரணம் என்று தனது நடவடிக்கைக்கு நியாயம் கற்பிக்கிறது கொழும்பு அரசு. ஆனால், அது நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாட்டு என்பதைப் போன்றதுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே தடையின் பின்னால் உள்ள நோக்கம் மிக நிச்சயமாக வேறொன்றாகவே இருக்க முடியும்.

போர்ப் பாதிப்புகளில் இருந்து வடபகுதி இப்போதுதான் மெல்லமெல்ல மீண்டெழுந்து வரும் நிலையில், இந்தக் கட்டுப்பாடுகள் வடக்கின் பொருளாதாரத்தின் மீது செலுத்தப்போகும் தாக்கம் மிகக் கரிசனைக்குரியது. இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான பங்கைக் கொண்டிருப்பது சுற்றுலாத் துறை. வடக்கு இதில் மிகப் பின்தங்கியிருந்தது. மிக அண்மையில்தான் சுற்றுலாத்துறையின்மீது வடக்கு மாகாண சபையின் பார்வை கூர்மையடைந்திருந்தது. வடமாகாண சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது. சுற்றுலாத்துறை வடமாகாண முதலமைச்சரின் கீழ் வருவதால், அவரும் இதில் அதிக அக்கறை காட்டியிருந்தார். வவுனியாவில் சுற்றுலாத்துறை விடுதிக்கான அடிக்கல் ஒன்றும் மாகாண சபையால் நடப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே வடக்குக்கு வரும் வெளிநாட்டவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் வடக்கில் மிக மோசமாகப் பாதிக்கப்படுபவை சுற்றுலா விடுதிகளே. இந்த விடுதிகளில் ஏற்கனவே அறைகளை முன்பதிவு செய்திருந்த பலர் அதிலிருந்து நீங்கிக்கொண்டனர். மிகப் பெரும் இழப்பை வடக்கு சுற்றுலாத்துறைக்கு இந்தத் தடை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே கொழும்பு அரசு கொண்டு வந்த இந்தத் தடை அல்லது கட்டுப்பாடு வடக்கு அரசினை பொருளாதார ரீதியில் முடக்குவதற்கான செயற்பாடா என்பதும் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்புத் திருத்தம் வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய அரசுக்கு எச்சரிக்கை

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதானால் அதற்கு முன்னர் அரசமைப்புத் திருத்தம் செய்தாக வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கியஸ்தரும் 'பரிசுத்தமான நாளையதினம்' இயக்கத்தின் நிறுவுநருமான வண. அதுரலியே ரத்ன தேரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்று விடுத்திருக்கிறார். அவ்வாறான ஒரு தேர்தலை நடத்துவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பங்காளிக் கட்சிகளுடனோ, அமைச்சரவை உறுப்பினர்களுடனோ விவாதிக்கப்படவில்லையென்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். தேர்தல்கள் நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே நடத்தப்படவேண்டும். ஒரு தனிப்பட்ட நபரின் தனிப்பட்ட சோதிட அட்டவணையின்படியல்ல என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தடுத்து நிறுத்த சகலவற்றையும் நாம் மேற்கொள்வோம். சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டங்களும் இதில் அடங்கும் என்று அவர் கூறியுள்ளார். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதிகள் இது தொடர்பாக ஜனாதிபதியை அடுத்த வாரம் சந்திக்கவிருக் கின்றனர். முடிந்த வாரத்தின் செயற்பாடுகளைக் கவனிக்கையில், ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் ஜனாதிபதி ஏற்கனவே முடுக்கிவிட்டுள்ளார் என்பது தெரிகின்றது. அதனால் அரசமைப்புத் திருத்தம் எதனையும் செய்வதற்கோ வேறு கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவோ அவர் தயாராய் இல்லை.

கடந்த வாரம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி தேர்தல் ஜனவரி முன்பகுதியில் நடைபெறவிருக்கிறது என்பதை அறிவித்தார். ஆனால் திகதி எதனையும் அவர் குறிப்பிடவில்லை. பெரும்பாலான கட்சி களின் தலைவர்கள் எல்லோரும் கூட்டத்துக்கு வந்திருந்த போதிலும் ஜே.எச்.யு. தரப்பில் அமைச்சர் உதயாகமன்பில் லைவைத் தவிர வேறு எவரும் வந்திருக்கவில்லை. முன்கூட் டியே தேர்தல் நடத்தப்படுவதை தாங்கள் எதிர்ப்பதாகவும் தேர்தல் முடிவுகள் சாதகமாய் இருக்கமாட்டாதென தாங்கள் அஞ்சுவதாகவும் சோஷலிஸக் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரியில் நடத்தப்படுவது உறுதியாகியுள்ளமையால், அடுத்துவரும் வாரங்களில் முக்கிய அரசியல் திருப்பங்கள் பலவும் வெளிப்படுவது சாத்தியமாகும். இதில் முக்கியமான ஒன்று ஜாதிக ஹெல உறுமய அரசுதரப்பில் தொடர்ந்து இருப்பது குறித்ததாக இருக்கும்.

அதன் கோரிக்கைகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற நிலைமை அதிகரித்துவரும் நிலையில், அரசிலிருந்து அக்கட்சி விலகிவிடுமோ என்ற கேள்வி எழுந்துள்ளது. அதன் விளைவு என்னவாக இருக்கும் என்றால் அது ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை ஆதரித்து நிற்கமாட்டாது என்பதுதான்.

### போப் வருவது சந்தேகம்

இன்னொரு விடயம் என்னவென்றால், ஜனவரி13, 15 திகதிகளில் போப்பாண்டவர் பிரான்சிஸ் இலங்கைக்கு வருகை தரவிருப்பது இரத்துசெய்யப்படக்கூடும் என்பதாகும். தேர்தல் ஒன்று நடைபெறும் நாட்டுக்கு அத்தேர்தல் தினத்துக்கு ஒரு மாதம் முந்தி அல்லது ஒரு மாதம் பிந்தித்தான் அவரது வருகை சாத்தியம் என்பது நடைமுறையில் இருக்கும் வழக்கம். தேர்தல் காலத்தில் அவர் குறித்த நாடுகளுக்குச் செல்வதில்லை. அடுத்த விடயம் கட்சி மாறுதல்களுக்கும் சாத்தியமிருப்பதாகக் கருதப்படுவதாகும். ஜே.எச்.யு.கட்சி எடுத்துள்ள இப்போதைய நிலைப்பாடு அரசியலில் ஒரு முக்கிய திருப்பத்தைக் காட்டுவதாக உள்ளது. கடந்த வாரம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் அக்கட்சி நடத்திய கூட்டத்தில் அரசு தரப்பு மட்டுமன்றி எதிர்த்தரப்பு பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன முதலிய வர்களுடன் ஐ.தே.க. தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கருஜயசூரிய, ரவி கருணாநாயக்க, ஆர்.யோகராஜன் ஆகி யோருடன் ஜே.வி.பி. சார்பாக சுனில் ஹந்துன் நெத்தி கலந்துகொண்டிருந்தார். வண.அதுரெலிய ரத்னதேரரின்-பிவித்துரு ஹெட்டக் - பரிசுத்தமான நாளைய தினம் என்பதன் விளக்கத்தையும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இறுதி எச்சரிக்கையையும் எல்லாத்தரப்பினரும் அங்கு விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

வண ரத்ன தேரர் கூறினார்:- இந்த அரசு ஒரு தனி மனிதர், ஒரு குடும்பம் மற்றும் ஒரு சில செல்வாக்குள்ள அதிகாரிகளின் கீழ் செயல்படுகின்றது. தவறுகள் இழைக்கப்படும்போது அதை நாம் சுட்டிக்காட்டாவிட்டால் எதிர்கால சந்ததிகள் எம்மைச் சபிப்பார்கள் என்றார். தமது இயக்கத்தினர் எல்லாக் கட்சியினரோடும் பேசியிருக்கிறார்கள் என்றார். தமது கோரிக்கைகள் இலங்கை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளின் மீது உருவாக்கப்பட்டவை. எனவே அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதில் சங்கடமிருக்காது. ஏனென்றால் எல்லாக் கட்சிகளுமே அதனை ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்றார்.

அரசமைப்புக்கான தமது கோரிக்கைகளை அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டமூலம் என்ற வகையில் வண அதுர லிய ரத்ன தேரர் பெரும் எடுப்பில் கூடியிருந்த மக்கள் மத்தியில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வண மாதுலுவாவே சோபித தேரர், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முதலியோர்களிடம் கையளித்தார். ராஜபக்ஷவை வரும் தேர்தலில் ஏன் உங்கள் இயக்கம் எதிர்த்து நிற்கப்போகிறது என்று கேட்டபோது அவர் கூறியது:-

ஜனாதிபதித் தேர்தலை அரசு நடத்துவதற்கு இன்னமும் இரண்டு ஆண்டுகள் உள்ளன. நான்கு ஆண்டுகள் ஆட்சி நடத்தியதன் பின்னர் தேர்தலை நடத்த அரசமைப்பின்படி அவருக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் இப்போது அவர் எடுத்திருக்கும் முடிவின் மீது கேள்விகள் எழுந்துள்ளன. 18 ஆவது திருத்தத்தின் மீது இது சரியானது அல்ல. இரண்டு ஆண்டுகள் இருக்கும் நிலையில் நாம் கூறும் திருத்தங்களை நிறைவேற்றுவது இலகுவாக இருக்கும். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதாகக் கூறியிருந்தார். 2010 ஆம் ஆண்டும் அதே மாதிரி உறுதியளித்திருந்தார். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மூன்றாம் முறையும் பதவி ஏற்க முயற்சிப்பது தார்மிகப் பிரச்சினைகளை எழுப்புகின்றது.

அன்று தாம் நிகழ்த்திய உரையின் பின்னர் சில அமைச்சர்கள் தம்மோடு உரையாடியுள்ளார்கள் என்றும் வண தேரர் கூறினார்.

எனது நிலைப்பாடு தெளிவானது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்புத் திருத்தங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்றார் அவர். சில கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் போது கூறியதாவது:-

ஜனாதிபதிதான் நிதியமைச்சராகவும் இருக்கிறார். ஒரு திறைசேரிகளும் அவரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பிரதான திட்டங்கள் வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் அவரின் கீழ் உள்ளன. இது ஊழல்கள் நடைபெற இடமளிக்க முடியும். அதேபோல் தவறுகளும் இடம்பெறலாம் . முன்னரும்கூட நிறைவேற்று அதிகாரங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இப்போது அது வெளிப்படையாகத் தெரிகிறது.

### ஐ.தே.கவின் நிலைப்பாடு

தேர்தல் ஜுரம் இப்போது ஐ.தே.கட்சியையும் பற்றிக் கொண்டதாகத் தெரிகின்றது. அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவாகத்தான் இருப்பர் என்பது பொதுவாக தெரிந்த விடயம் என்றாலும், தேர்தல் திகதி முறையாக அறிவிக்கப்படும் வரை ஐ.தே.கவும் தனது வேட்பாளரை பகிரங்கப்படுத்தாமல் இருக்க முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. ஏனைய கட்சிகளுடன் இது பற்றி விவாதிப்தற்காக இந்தக் காலப்பகுதியை அவர்கள் பயன்படுத்த விரும்புகிறார்கள். அதேநேரம் அக்கட்சி உருவாக்கியுள்ள 7 அம் சங்களைக் கொண்ட - தேர்தல் திட்டம் பற்றி ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி அவர்களின் ஆதரவை யும் பெற்றுக்கொள்ள விரும்புவதாகவும் கூறப்படுகின் றது.

அக்கட்சி உருவாக்கியுள்ள 7 அம்சபொதுத்திட்டம் வருமாறு:-
1. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு திரும்புவது. 2. தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருவது. 3. சுயாதீன ஆணைக்குழுக்களை மீளவும் நிலை நிறுத்துவது. 4. மாகாண சபைகளை மேலும் வலுவுள்ளவை ஆக்குதல். 5. ஊழல்களையும் உறவினர்களை பதவிகளில் அமர்த்துவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல். 6. சமூக உள்ளக கட்டுமானத்தை அபிவிருத்தி செய்தல், சட்ட ஆட்சியை மீளக் கொண்டு வருவது மற்றும் கல்வித்துறையை மேம்படுத்தல். 7. உயர்ந்து கொண்டுபோகும் வாழ்க்கை செலவைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல்.

இந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளின் ஆதரவை ஐ.தே.க. பெற்றுக் கொள்ள விரும்புகிறது. இந்த ஏழு அம்சத் திட்டம் தொடர்பாக அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோட்டை சிறிநாக விகாராதிபதி, வண. மாதுலுவாவே சோபிததேரரை கடந்த வாரம் சந்தித்து பேசியிருந்தார். அதேபோல் எதிர்க்கட்சித் தலைவரை அவரது அலுவலகத்தில் சந்தித்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் 7 அம்சத் திட்டம் பற்றி விளக்கிக் கூறப்பட்டது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுகவீனமுற்றிருப்பதால் சந்திப்பில் கலந்துகொள்ள முடியவில்லை.

சுமந்திரன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது, ஜனாதிபதித் தேர்தல் பற்றி இன்னமும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அது அறிவிக்கப் பட்டதன் பின்னர் எமது கூட்டமைப்பு பிரதிநிதிகளுக் கிடை யில் விரிவாக ஆராயப்படும். ஏனைய கட்சிகளுடனும் கலந்தா லோசித்து முடிவுகள் எடுக்கப்படும் - என்றார்.

கூட்டமைப்பு வட்டாரமொன்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாது தெரிவித்த கருத்தில், மஹிந்த ராஜபக்ஷவை நாம் ஆதரிக்கும் நிலையில் இல்லை. அவர் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையையும் உருவாக்க நாம் விரும்பவில்லை. அதேசமயம் எதிர்த்தரப்பில் போட்டி யிடு பவரும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவரா என்பதை நாங்கள் ஆராய வேண்டியிருக்கும் - என்றனர்.

# அன்பில் இருக்கிறது ஆனந்த தீபாவளி



இன்று புத்தாடை அணிந்து பட்டாசுகள் வெடிக்க வைத்து சுவையான உணவு வகைகளை ஒருவருக்கொருவர் பரிமாறி ஆனந்தம் கொள்கிறோம். இந்த மகிழ்ச்சி இந்த ஒரு நாளோடு நின்று விடக் கூடாது. ஒவ்வொரு தினமும் தீபாவளியாக மாறவேண்டும். அப்படி மாற்றக்கூடிய ஆற்றல் உங்களிடம் தான் இருக்கிறது. கோடி கோடியாக பணம் இதற்குத் தேவையில்லை. அன்பு என்ற சக்தியை நீங்கள் ஒருவருக்கொருவர் காட்டினாலே போதும். தினம் தினம் தீபாவளியாக உங்கள் வாழ்க்கை மாறிவிடும்.

பூமிதேவி பாசத்தின் காரணமாக நரகாசுரனுக்கு சாகா வரத்தை வேண்டினாள். ஆனால் பகவான் மிக எச்சரிக்கையுடன் அதனை மறுத்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவரவர்களின் தகுதிகளுக்குத் தகுந்தாற் போலவும், குணங்களுக்கு தகுந்தாற் போலவும்தான் வலிமை வழங்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தற்காலத்துப் பிள்ளைகளின் குணங்களைச் சரியாக அறிந்து கொள்ளாமல் தங்களிடம் இருக்கும் செல்வங்களை எல்லாம் பாசத்தின் காரணமாகக் கொடுத்து விட்டு அன்றாடம் உண்பதற்குக் கூட திண்டாடும் பெற்றோர்கள் இருக்கிறார்கள். பெற்றோர்களைப் புறக்கணித்து விட்டு அன்பில்லாமல் வாழும் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் படு தோல்விகளை அடைந்து பின்னாளில் சரியான பாடத்தைக் கற்றுக் கொள்கிறார்கள். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று சொல்வது போல வாழுங்காலத்தில் பெற்றோரிடம் அன்பு காட்டி சேவை செய்யாமல் கர்ம வினைகளை அனுபவிக்கும் காலத்தில் உணர்ந்து எந்தப் பயனும் இல்லை. தாய் என்பவள் உண்மையில் அம்பிகையின் சொரூபம். அந்தத் தாய் மாட மாளிகையில் வாழலாம். தெருவில் பிச்சைக்காரியாகச் சுற்றலாம். எப்படி இருந்த போதும் அவள் அன்பை வாரி வழங்கும் அமுதக் கடலாக இருக்கிறாள். அவள் காட்டும் அன்புக்குப் பதிலாக வஞ்சகத்தையும், துரோகத்தையும் பிள்ளைகள் கொடுக்கக்கூடாது.

பெற்றோர்களிடத்தில் மட்டுமல்ல எல்லோரிடத்திலும் நாம் அன்பு காட்டத் தொடங்கி விட்டால் ஆனந்தத் தீபாவளி எமது உள்ளத்தில் தினம் தினம் ஊற்றாகப் பெருக்கெடுப்பதை நீங்கள் அனுபவரீதியாகவே அறிந்து கொள்வீர்கள். எல்லா உயிர்களிடமும் நாம் அன்பு காட்ட வேண்டும் என்று சொல்வது ஏதோ சம்பிரதாயத்திற்காக கூறப்படும் வார்த்தை அல்ல. வேதத்தின் சாரம். ஆகமங்களின் சாரம் எல்லாம் இந்த அருமையான தத்துவத்தில் தான் அடங்கி இருக்கிறது. இறைவன் ஒவ்வொரு உயிர்களிடத்திலும் உறைந்திருக்கிறான். கண்ணுக்குத் தெரியும் மனித வடிவங்களை, நேசிக்காமல் கண்ணுக்குப் புலப்படாத இறைவனை உங்களால் எப்படி நேசிக்க முடியும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்கள் கண்களால் காணும் சகல மனித வடிவங்கள், விலங்கினங்கள், பறவையினங்கள், ஊர்வன முதலான எல்லாமே இறைவனின் தோற்றங்கள்தான். கண்களுக்குத் தெரியும் இந்தத் தெய்வ வடிவங்களிடம் அன்பு காட்டாமல் தீமை செய்தால் அதுவே தீய கர்ம வினையாக உங்களைப் பற்றுகிறது. இதுதான் துன்பம் தோன்றுவதற்கு முக்கிய காரணமாகும்.

அமுதம் அருகில் இருக்கும் போது சாக்கடை நீரை நாம் விரும்புவது அறியாமை. அன்புதான் அமுதம். அதைத் தினம் தினம் பருகுவதற்கான வாய்ப்பு இருக்கும் போது, அதைப் புறக்கணித்து வெறுப்பையும், பொறாமையையும் அனலாக வாரிக் கொட்டுவது அறியாமையாகும். தீபாவளி அன்பிலேதான் அடங்கி இருக்கிறது. தீபாவளி நன்னாளில் எல்லோருக்கும் ஞானஒளி, நல்ல புத்தி கிடைக்க வேண்டுமென்று அனைவரையும் ஆசீர்வதிக்கின்றோம். இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

## அருளாசிச் செய்தி



இன்று தீபாவளி நன்னாள். இந்தத் தீபாவளி என்ற தீபத் திருநாளில் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று இறைவனை உளமாரப் பிராத்தித்து வாழ்த்தி வணங்குதல் வேண்டும். இந்த இனிய புனித புண்ணிய நாளில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி நல்கி மகிழ்கின்றோம். "ஆண்டிலோர் தீபாவளியாம். அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம்" என்பது முதுமொழி. ஆகவே அந்த வாக்குக்கிணங்க தமிழ்மக்களாகிய நாம் எல்லோரும் ஆண்டவனுடைய அருள் வேண்டிப் பிரார்த்தித்து வழிபாடியற்றுதல் வேண்டும்.

தீபாவளி என்றாலே எமது நினைவுக்கு வருவது புத்தாடை. ஆதலால் அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய்த் திகழும் மூத்தோரை வணங்கி புதிய ஆடைகளை அணிந்து அன்புடன் அவர்களது ஆசி வேண்டி வந்தித்தல் வேண்டும்.

இன்றைய தீபாவளி இனிதாய் மலர்ந்து எல்லோர்க்கும் நன்மையை அளிக்க வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி நல்லைக் கந்தனுடைய பாதம் பணிந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை ஆதீன குருமுதல்வர்**

## சகலருக்கும் நலன்கள் கிட்டட்டும்



நரகாசுரன் எ[illegible]ன்ற அரக்கனை வதம் செய்[illegible] தீபாவளித் திரு நாள். தமிழ்[illegible] மக்களாகிய நாம் அனைவ[illegible] தீபாவளித் திரு நாளை மகிழ்[illegible]ன் கொண்டாடி வருகின்றோ[illegible]. இடம் பெயர்ந்த மக்கள் அ[illegible]னவரும் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்ந்து நிம்மதியான அச்சமற்ற வாழ்வுடன் கூடியதான திருநாளாக அடுத்த வருட தீபாவளித் திருநாள் அமையவேண்டும் எனப் பரம்பொருளாகிய இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக. சாந்தி, சமாதானம், ஐக்கியத்துடன் கொண்டாடப்படும் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சகல நலன்களும் கிடைக்கப் பிரார்த்தித்து நல் ஆசிகளையும் எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**

## காத்திரமான அரசியல் அந்தஸ்து கிடைக்க அருள் ஒளி கிடைக்கட்டும்

அனைத்துள்ளங்களுக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இருள் அகற்றி ஒளிதருவது தீபாவளித்திருநாளாகும். இருளில் இருப்பவர்களுக்கு வாழ்வில் ஒளி கிடைத்திடும் நன்னாளாகும். தமிழர்கள் தமது வாழ்வில் பல சோதனைகளையும் வேதனைகளையும் கண்டு அனுபவித்தவர்கள். அதனை அவ்வப்போது வரும் இனிய திருநாள்கள் மற்றும் பண்டிகைகளைக் கொண்டாடி அதன் மூலமாக தமக்கு ஓர் ஆறுதலும் அமைதியும் நல்வழியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தமது வாழ்வை நகர்த்திக் கொள்கின்றார்கள். மதகுருமார்கள், சமூக சமயத் தலைவர்களும் அவ்வாறே தமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மக்களின் நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்றார்கள். அந்த வகையில் இவ்வினிய தீபாவளித் திருநாளும் மக்களுக்கு ஒளிதர வேண்டும் என நானும் வாழ்த்துகின்றேன், ஆசிர்வதிக்கின்றேன்.

தமிழர் தம் வாழ்விற்கு பல நல வள சுகங்கள் கிடைத்து வந்தாலும் கூட அரசியல் அந்தஸ்தைக் காத்திரமாக பெற்றுக் கொள்ள இத்திருநாள் வழி சமைக்கட்டும். தமது சொந்த இடங்களுக்கு எப்போது செல்லுவோம் என்று எதிர்காலம் பற்றி இன்னமும் ஐயப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு வழி கிடைக்கட்டும். எமது பிரதேசத்தில் பெருகி வரும் டெங்கு தாக்கமும் அற்றுப் போக இன்றைய இனிய நாள் அருள் செய்யட்டும். கோபம், பொறாமை, அழுக்கு, புகைப்பது, குடிப்பது, ஆபாசப்பேச்சுக்கள், வக்கிரபுத்திகள், ஏமாற்றுவது, புறம் கூறுவது, பாலியல் வக்கிரங்கள், சுயநலம், திருட்டு, வரதட்சணை என மனிதனை விலங்குத்தன்மையடைய வைக்கும் குணஇயல்புகள் அற்றுப்போக அருள் ஒளி கிடைக்கட்டும்.

இத்திருநாளின் மூலம் நாம் இயலாதவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகள் செய்ய முற்படுவோம். அநாதைகள், முதியவர்களுக்கு ஆதரவாக இருப்போம்.



ஆலயவழிபாடு செய்வோம், பெரியோர் ஆசிகள் பெற்று மகிழ்வோம். வறுமையிலும், பசியிலும், சுகவீனங்களிலும், துக்கங்களிலும், துயரத்திலும், வேலையில்லாப் பிரச்சினைகளிலும், துணையின்றி உள்ள பெண்களை தலைமைத்துவமாக கொண்டு வாழும் பெண்களின் வாழ்விலும் ஒளிபிறக்க தீபா வளி வழி செய்யட்டும்.

மக்கள் குதூ லத்துடன் தீபங் கள் ஏற்றி மகிழ்வுடன் தீபாவளி கொண்டாடட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**"வித்யாசாகரம்"**
**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்**
தலைவர் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

## தீபத் திருநாள் வாழ்த்துச் செய்தி



தமிழர் தம் வாழ்வியலில் பல விடயங்கள் அடங்கியுள்ளன. இந்த வகையில் எமது மக்களால் கொண்டாடப்படும் தீபாவளிப்பண்டிகையும் முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும். வரங்கள் பல பெற்ற நரகாசுரன், தான் பெற்ற வரத்தாலும் வலிமையாலும் தேவர்களை மிகுந்த துன்பத்துக்கு உள்ளாக்கினான்.

இந்த நிலையில் தேவர்கள் தமது நிலையையும் துன்பத்தையும் கிருஷ்ணபகவானுக்கு எடுத்துரைக்க வலிமைபொருந்திய கிருஷ்ணபகவான் துன்பம் விளைவித்த நரகாசுரனை அழித்து தேவர்களுக்கு மகிழ்வு அளித்த மகத்தான நாள். இந்த நன்னாளில் புத்தாடை அணிந்து தீபங்கள் ஏற்றி துன்பங்கள் பலவும் மறைந்ததை கொண்டாடுவர்.

இவ்வாறே எம்மத்தியிலும் உள்ள பல நரகாசுரன்கள் நீண்ட நெடிய எமது இன வரலாற்றில் எமக்கு இழைத்த, இன்றும் இழைத்து வரும் துன்பங்களில் இருந்து விடுதலை பெறும் பொருட்டு இறைவனை பிரார்த்திப்பதோடு என்றோ ஒரு நாள் எம் மத்தியில் உள்ள நரகாசுரன்கள் அழிக்கப்படுவர். அன்றைய நன்னாள் வெகு விரைவில் மலரும் என்ற நம்பிக்கையோடு இத் திரு நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,**
**தவிசாளர், வலி மேற்கு பிரதேச சபை**

## இருள் அகன்று நிம்மதியாக வாழ வழி கேட்டுப் பிரார்த்திப்போம்



இந்துக்களின் இனிய விழா தீபாவளி. இடரின்றி வாழ இறையருளை வேண்டித் தீபம் ஏற்றிப் பிரார்த்திக்கும் திருநாள். இந்நாளில் அனைவரும் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள். எங்களைச் சூழ்ந்திருக்கும் இருள் அகன்று நாம் நிம்மதியாக வாழ வழி கேட்டுப் பிரார்த்தியுங்கள். அன்பு, இரக்கம், கருணை, அமைதி, அரவணைப்பு நிறைந்த சூழல் உருவாக இறையருளை வேண்டுங்கள். எமது சமூகத்தில் தீய எண்ணங்களோடு வாழ்பவர்கள் திருந்த வேண்டுதல் செய்யுங்கள். எமது அகத்திலுள்ள அறியாமை அகலவும், அறியாமையினால் செய்த தவறுகளை மீளவும் செய்யாது இருக்கவும் வரம்கேளுங்கள். ஏழ்மையால், நோய்களால் தவிக்கும் அன்பர்களுக்கு ஆறுதல் கேட்டு வழிபாடு செய்யுங்கள்.

உறவுகளின் பிரிவினாலும், உள வேதனைகளாலும் அவதியுறும் மனிதர்களுக்கு விடிவு கிடைக்க வேண்டுதல் செய்யுங்கள். சிறைக்கூடங்களில் சிக்கித் தவிப்பவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க மன்றாடுங்கள். உலகத்துக்காகப் பிரார்த்தியுங்கள். உண்மை ஒளி உண்டாகட்டும். அன்பர்கள் அனைவருக்கும் எனது இனிய தீபாவளி வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**

## மாவோயிஸ்டுகள் மூவர் அடித்துக் கொலை



விசாகபட்டினம், ஒக்.22
ஆந்திர மாநிலத்தின் விசாகப் பட்டினம் மாவட்டத்தில் பழங் குடியினத்தைச் சேர்ந்த கிராம மக்கள் தாக்கியதில் 3 மாவோ யிஸ்ட்டுகள் உயிரிழந் தனர். இதுகுறித்து பொலிஸார் செய் தியாளர்களிடம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கூறிய தாவது:
விசாகப்பட்டினம் மாவட்டத் தில் உள்ள ஜிந்தப்பள்ளி வனப் பகுதியில் 4 மாவோயிஸ்ட் டுகள் ஞாயிற்றுக்கிழமை மாலை நுழைந்தனர்.
அங்கு பொலிஸாருக்கு தக வல் தெரிவிக்கும் நபரையும், கோயில் பூசாரியையும் மாவோயிஸ்ட்டுகள் கடத்திச் சென்றனர். பின்னர் ஓர் இடத் தில் வைத்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கும் நபரை முதலில் கொலை செய்தனர். இரண்டாவதாக கோயில் பூசாரியை கொல்ல முயன்ற போது அந்தப்பகுதி கிராம மக்கள் மாவோயிஸ்டுகளைச் சூழ்ந்து கொண்டனர். மாவோ யிஸ்டுகளின் பிடியில் இருந்து பூசாரியை மீட்ட கிராமத்தினர் ஆவேசத்தில் அவர்களை தாக் கினர். இதில் மாவோயிஸ்ட் டுகள் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் தப்பிச் சென்றார்.
இதுகுறித்து தகவல் அறிந்த தும், விசாகப்பட்டினம் மாவட்ட பொலிஸ்துறை கண் காணிப் பாளர் கே. பிரவீண் உட்பட பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று இறந்தவர் களின் உடல்களை மீட்டனர். அந்த இடத்தில் இருந்து ஏகே-47 உட்பட 3 ஆயுதங்களையும் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர். (வ)

# பட்டாசு ஆலையில் விபத்து ஆந்திராவில் 17 பேர் சாவு



ஹைதராபாத், ஒக்.22
ஆந்திராவில், பட்டாசு தொழிற் சாலையொன்றில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் சிக்கி 9 பெண்கள் உட்பட 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயங்களுடன் 7 பேர் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.
ஆந்திராவின் கடலோர மாவட் டமான கிழக்கு கோதாவ ரியில், காக்கிநாடா அருகே வகடிப்பா என்ற கிராமத்தில், தனியார் பட்டாசுத் தொழிற் சாலை இயங்கி வந்தது. அங்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் சுமார் 3 மணியள வில் பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. தொழிற்சாலையும் வெடித்துச் சிதறியுள்ளது. தொடர்ந்து மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
இதுகுறித்து மாவட்ட ஆட்சி யாளர் நீத்து பிரசாத் கூறுகை யில்,
திடீரென்று இந்த பட்டாசுத் தொழிற்சாலை வெடித்துச் சிதறி உள்ளது. 9 பெண்கள் உட் பட 17 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காக்கிநாடா அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றார்.
மீட்புப் பணி தொடர்பாக மாவட்ட எஸ்பி ரவி பிரகாஷ் கூறும்போது, உயிரிழந்தவர் களின் உடல்கள் முற்றிலு மாக நெருப்பில் கருகி விட் டன.
15 பேர் சம்பவ இடத்தில் உயி ரிழந்தனர். 2 பேர் மருத்துவ மனையில் சிகிச்சை பயனின்றி இறந்துள்ளனர். எங் களுக்கு கிடைத்துள்ள முதலாவது தகவலின்படி, பட்டாசு தயா ரித்துக் கொண்டிருக்கும் போது இரசாயன விளைவு (கெமிக் கல் ரியாக்ஷன்) ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளது. இது தொடர் பாக விசாரணை நடத்தப் பட்டு வருகிறது- என்றார். (வ)

# பண்டிகைக் காலங்களில் பாதுகாப்பை உறுதி செய்க

### மாநில அரசுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் வேண்டுகோள்

டில்லி, ஒக்.22
எதிவரும் விழாக்காலங்களில் மதக் கலவரங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால், வழிபாட் டுத் தலங்கள் மற்றும் பதற்றமான சூழல் நிறைந்த பகுதிகளில் மாநில அரசுகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.
குறிப்பாக, டில்லி, மும்பை, நாக்பூர், புனே, ஹைதராபாத், பெங்களூர், அகம தாபாத், கொல்கத்தா, சென்னை மற்றும் வதோதரா உள்ளிட்ட நகராங் களின் அதிகாரிகள் எந்த வித மதக் கலவரங் களும் ஏற்படாமல் இருக்க மிகவும் விழிப்புடன் இருக்க வேண் டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
உள்துறை அமைச்சகம் விடுத் துள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-
தீபாவளியின்போது பட்டாசுகளை வெடிப்பது, ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது, குறிப்பிட்ட சமூ கத்தினருக்கு எதிராக கோஷங்கள் எழுப்புவது, பண்டிகைக்காக கட்டாய நிதி அறவீட்டில் ஈடுபடுவது, பிரச்சி னைக்குரிய இடங்களில் சிலை களை வைப்பது, பெண்களைக் கேலி செய்வது போன்ற செயல்களில் ஈடு படுவது போன்றவை வகுப்பு மோதல் களுக்கு காரணமாகி விடும். வகுப்பு ரீதியாக பதற்றம் ஏற்படக் கூடிய இடங்களிலும், வழிபாட்டு தலப் பகுதிகளிலும் தகுந்த பாதுகாப்பு ஏற் பாடுகள் பலப்படுத்தப் பட்டு மோதல் கள் உருவாகிவிடாமல் தடுக்க தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக் கப்படவேண்டும்-என்றுள்ளது. (வ)



ஒளிரட்டும் தீபச்சுடர்!
இத்தீபத் திருநாளில் அனைவரினதும் வாழ்வில் இன்பச் சுடர் ஒளிர வாழ்த்துகின்றோம்.
COMMERCIAL BANK
Fitch ரேட்டிங் - AA(lka)
RAM ரேட்டிங் - RAM AA+/P1
C/17/27
www.combank.lk

# ஈராக்கில் 21 பேர் சாவு

## ஐ.எஸ்.ஐ.எஸ். நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில்

பக்தாத், ஒக்.22
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கில் நேற்று முன்தினம் நடத்திய மனிதவெடிகுண்டுத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கியுள்ள சன்னிப் பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்தநிலையில் தலைநகர் பக்தாத்தில் உள்ள ஷியா பிரிவினர் தொழுகை நடத்தும் அபாஸ் அல் அத்லி மசூதியை குறிவைத்து ஐ.எஸ்.ஐ.எஸ்-ஸைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் ஊடுருவியிருந்தனர்.

தொழுகை முடிந்து அனைவரும் புறப்படும் வேளையில் தாங்கள் நிரப்பி வந்த வெடிப்பொருள்களை அவர்கள் வெடிக்கச் செய்துள்ளனர்.

இந்த பயங்கர தாக்குதலில் 21 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அதே பகுதியில் கடந்த சனிக்கிழமை அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று மனித வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 26 பேர் கொல்லப்பட்டதும் 96 பேர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (வ)



ஈராக் தலைமையகத்தில் பக்தாத்தில் உள்ள ஷியா பிரிவினர் தொழுகை நடத்தும் அபாஸ் அல் அத்லி மசூதி மீது நடத்தப்பட்ட தாக்குதல்

# எபோலாவின் தாக்கம் நைஜீரியாவில் இல்லை

## உலக சுகாதார நிறுவனம் தகவல்

ஜெனிவா, ஒக்.22
ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் எபோலா வைரஸ் நோய்த்தாக்கம் இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த சில மாதங்களாக மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோய் தீவிரமாகப் பரவி வருகிறது.

இதன் காரணமாக இதுவரை 4447 பேர் அந்தநாடுகளில் உயிரிழந்துள்ளனர். அதிலும் லைபீரியா நாட்டில் எபோலோவின் தாக்கம் அதிகமாக உள்ளது. எபோலா வைரஸ் தாக்கம் காரணமாக ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நைஜீரியாவில் எபோலோ நோய் பாதித்த நோயாளிகள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் பதிவு செய்து 42 தினங்கள் கடந்துள்ளன என்றும், அதன் பின்னர் நோய்த் தொற்று பாதித்த நபர்கள் என்று யாரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் நோய்த் தாக்குதல் இல்லாமல் இருப்பது, நைஜீரியாவில் எபோலோ நோய்த் தாக்கம் இல்லை என்பதையே காட்டுகிறது என்றும், நைஜீரியா அரசைப்போல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டால் எபோலா நோயை அனைத்து நாடுகளிலும் இல்லாமல் செய்து விடலாம் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)



உலகில் மூன்றாவது பெரிய ஜனநாயக நாடாகக் கருதப்படும் இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதியாக ஜோடோ விடோடோ நேற்று முன்தினம் பதவியேற்றார். அவரது பதவியேற்பு விழாவில் ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் உட்பட உலகின் பல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (வ)



### டைட்டானிக் கப்பலின் உணவு விவரப் பட்டியலும் ஏலம்

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்த பொருள்கள் பல லட்சம் பவுண்ஸ்களுக்கு ஏலம் போயுள்ளன. பிரிட்டனின் வில்ட்ஷயர் என்ற இடத்தில் நடைபெற்ற ஏலத்தில், டைட்டானிக் கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் ஏலம் விடப்பட்டன. இதில் கப்பலின் உணவு விவரப்பட்டியல் அட்டை 10 லட்சம் பவுண்ஸ்களுக்கு ஏலம் போனது. பயணி ஒருவரின் பாதுகாப்பு பெட்டகத் தின் சாவி 10 லட்சத்து இரண்டாயிரம் பவுண்ஸ்களுக்கு வாங்கப்பட்டது. டைட்டானிக் பொருள்களை வாங்க, உலகெங்கிலிருந்தும் ஏராளமானோர் விரும்பியதாக ஏலத்தை நடத்திய அண்ட்ரூ அல்ட்ரிட்ஜ் தெரிவித்தார். 1912 ஆம் ஆண்டு சுற்றுலாவை ஆரம்பித்த டைட்டானிக் கப்பல், பனிமலை மீது மோதி கடலில் மூழ்கியது. அதில் பயணித்த ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### கென்ய எல்லையில் 5 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் 5 பேரை கென்ய ராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்று பயங்கரவாத தாக்குதலொன்றை தடுத்து நிறுத்தியதாக கென்ய ராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

எதியோப்பியாவில் இருந்து கென்யாவிற்கு வெடி பொருள்களுடன் ஒரு கார் வந்ததாகவும், அதில் சந்தேகத்துக்கு இடமான வகையிலான 5 இஸ்லாமிய பயங்கரவாதிகள் தங்கள் ஆடைகளுள் வெடி பொருள்களை இணைத்து வைத்திருந்ததாகவும் அவர்கள் தற்கொலைப் படையினராக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (வ)

# பிரான்ஸில் சிறுமிகளை அச்சுறுத்தும் கோமாளிகள்

## விசாரணை நடத்துகின்றனர் பொலிஸார்

பரிஸ், ஒக்.22
பிரான்ஸில் பாடசாலை மாணவிகளை கோமாளி வேடமிட்டு நபர்கள் சிலர் பயம் காட்டுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு பிரான்ஸின் டோயோய் நகரத்தில் உள்ள சிறுமிகளுக்கான தொடக்கப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளை குறிப்பிட்ட சில நபர்கள் சிலர் கோமாளி வேடமிட்டு அச்சுறுத்தி வருகின்றனர்.



பாடசாலையில் மாணவிகள் விளையாடும் நேரத்தில் திடீரென சுவர் ஏறிக் குதித்து பொம்மைத் துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டுதல், வீட்டுக்குச் செல்லும் வேளையில் அவர்களை பின் தொடர்ந்து சென்று கத்தியைக் காட்டி மிரட்டுவது போன்ற செயல்களில் இந்த கோமாளி வேடமிட்டவர்கள் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் தகவல்களை மாணவிகள் தங்களது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். ஆனால் இதை முற்றிலுமாகப் பொலிஸார் மறுக்கின்றனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், இதுபோன்ற சம்பவங்கள் பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் நிகழ்கின்றன என்றும், இங்கு மாணவிகள் தரப்பில் கூறப்படுவது எல்லாம் வதந்திகள் என்றும் தெரிவித்துள்ளனர். ஆனால் மாணவிகள் தாங்கள் கூறுவது உண்மை என்று வலியுறுத்திக் கூறுவதால், தற்போது இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# சுவீடன் கடற்பகுதியில் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் நடமாட்டம்

## ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் அதிர்ச்சி



சுவீடன் நாட்டு கடற்பகுதியில் வெளிநாட்டு ஆழ்கடல் சோதனை ஒப்பந்தத்துக்கு எதிராக கடந்த சில தினங்களாக 3 இடங்களில் ரஷ்யாவின் அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்கள் சோதனையில் ஈடுபட்டன என்று சுவீடன் குற்றம் சாட்டியது. இதற்கு ரஷ்யா மறுப்புத் தெரிவித்துள்ளது.

சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோமைச் சுற்றிய கடற்பகுதியில் ஏராளமான தீவுகள் உள்ளன. கடந்த சில தினங்களாக இந்தத் தீவுகளைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் ஆழ் கடலுக்குள் சந்தேகத்துக்குரிய நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டம் இருப்பதாக ஸ்வீடன் பாதுகாப்புத் துறைக்கு முறைப்பாடுகள் வந்தன.

அதைத் தொடர்ந்து, சுவீடன் நாட்டு கடற்பகுதியில் கடற்படையினர் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஆழ்கடலுக்குள் அத்துமீறி நுழைந்த ரஷ்யாவின் சிறிய ரகஅதிநவீனநீர்மூழ்கிக் கப்பலை அங்கிருந்து விரட்டினர்.

அத்துடன் சுவீடன் நாட்டு ஆழ் கடல் பகுதிக்குள் சந்தேகத்துக்குரிய வகையில் நீர் மூழ்கிக் கப்பல்கள் பயணிப்பதை கண்காணிக்கும் பணியில் 100 பேர் கொண்ட குழு ஈடுபடுத்தப்பட்டது. ஆழ்கடலுக்குள் சந்தேகத்துக்குரிய வகையில் சுற்றியநீர்மூழ்கிக் கப்பலொன்றை நேற்று முன்தினம் ஒருவர் படம் பிடித்து வெளியிட்டார்.

இது உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியானது. ஸ்வீடன் கடல் பகுதியில் ரஷ்யாவின் சிறிய ரக அதிநவீன நீர்மூழ்கி கப்பல்கள் அத்துமீறி நுழைந்திருப்பது ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சுவீடன் நாட்டு கடற்பகுதிக்குள் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் அத்துமீறி நுழையவில்லை என்று ரஷ்ய பாதுகாப்புத்துறை நேற்று முன்தினம் இரவு மொஸ்கோவில் மறுப்புத் தெரிவித்துள்ளது. (வ)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஐப்பசி-06 வியாழக்கிழமை 23.10.2014
திதி: அமாவாசை பி.இ.03.54 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ.05.07 வரை
சுபநேரம்:07.32-09.02 வரை
இராகுகாலம்:01.32-03.02 வரை
கேதாரகௌரி விரதம், அமாவாசை விரதம்

**மேடம்:** சொத்துத் தொடர்பான விடயங்களில் நேரடியாகக் கவனம் செலுத்துவது நல்லது. பொருளாதார சந்தேகங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்ள தகுந்த ஆலோசகரிடம் ஆலோசனை கேட்கலாம்.

**இடபம்:** துணிச்சலாக எதையும் செய்து வெற்றி பெறுவீர்கள். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். தேவை யான வசதிகள் உண்டாகும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** உடல் சோர்வும், மனக் குழப்பமும் நீங்கும். செலவு கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும். தேவையான பண உதவியும் கிடைக்கும்.

**கடகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். முடிவில் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். குடும்ப விடயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**சிங்கம்:** எதிர்பாராத பண உதவிகளும் கிடைக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைப் பிடிக்கவும். வியாபாரிகளுக்கு நல்ல விதமாக பண வசதிகள் அனைத்தும் வேண்டியபடி கிடைக்கும்.

**கன்னி:** தடைப்பட்டிருந்த காரியங்கள் அனைத்தும் இனிதே நடைபெறும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இனிமையாகப் பேசுவதில் வல்லவரான நீங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** நண்பர்கள், உறவினர்கள் மூலம் நல்ல செய்திகள் உங்களை வந்தடையும். பயணங்களால் பயன் கிடைக்கும். வங்கிகளில் சேமிப்புகள் உயரும். விலையுயர்ந்த ஆடைகள் ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ காரியங்களில் கவனத்தை செலுத்துவீர்கள். உறவினர்களிடம் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும். நிலம் வீடு சம்பந்தமாக உள்ள முயற்சிகள் கைகூடும். புதிய வேலை கிடைக்கும்.

**தனுசு:** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தங்களது திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்புகள் வந்து சேரும். தடைப்பட்டு பாதியில் நின்ற தொழில் முயற்சி தற்போது முடிவடையும். எதையும் தைரியத்துடன் செயல்படுத்துவீர்கள்.

**மகரம்:** மனதில் அமைதி குறையும். எல்லா விதத்திலும் பரபரப்பு தொற்றிக் கொள்ளும். அரசியல்வாதிகளுக்கு பெண்கள் உதவியால் உயர் பதவி கிடைக்கும்.

**கும்பம்:** அனைத்து விதங்களிலும் நன்மைகளையே பெறும் கிரக காலகட்டத்தில் இருக்கிறீர்கள். கொடுக்கல் வாங்கலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பப் பிரச்சினைகளும் முடிவுக்கு வரும்.

**மீனம்:** நற்செய்திகள் உங்களைத் தேடிவரும். உடன்பிறப்புகள் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுக்காக சில தியாகங்களையும் செய்வீர்கள். குழந்தைகளின் கல்வி, நடத்தை மிகவும் நன்றாக இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | | 1 | | 7 |
| | 4 | | | 8 | 6 | | 3 | 2 |
| | 2 | 1 | | | | 4 | 6 | |
| 1 | | | | 7 | | 8 | | 6 |
| 2 | | | 9 | | 8 | | | 1 |
| 6 | | 5 | | 2 | | | | 4 |
| | 1 | 8 | | | | 2 | 7 | |
| 7 | 9 | | 2 | 1 | | | 4 | |
| 5 | | 2 | | | | 9 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 4 | 2 | 7 | 5 | 6 | 1 | 3 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 9 | 7 | 4 | 8 |
| 7 | 3 | 1 | 8 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 1 | 6 | 7 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 |
| 4 | 8 | 3 | 9 | 2 | 7 | 1 | 6 | 5 |
| 5 | 2 | 9 | 4 | 1 | 6 | 8 | 3 | 7 |
| 6 | 4 | 8 | 3 | 5 | 2 | 9 | 7 | 1 |
| 3 | 7 | 5 | 6 | 9 | 1 | 2 | 8 | 4 |
| 9 | 1 | 2 | 7 | 4 | 8 | 3 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இறுதிப்போட்டியில் நவஜீவன்ஸ்



யாழ்ப்பாணம்,ஒக்.22
பரபரப்பான ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த அணிகள் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களிலும் லீக் சுற்று ஆட்டங்களிலும் பலம்வாய்ந்த பல அணிகளைத் தோற்கடித்து புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தன.

இரு அணியினரும் சமபலத்துடன் களமிறங்கியதால் மைதானத்திலும் அதன் வெளியேயும் பரபரப்பான நிலை காணப்பட்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 17ஆவது நிமிடம் வரை இரு அணியினரும் கோல் போடுவதற்குக் கடுமையாகப் போராடினர்.

இந்தச் சூழ்நிலையில் பலத்த போட்டிகளுக்கிடையில் நவஜீவன்ஸ் அணி முதலாவது கோலைப் போட்டது. இதனை அடுத்து ஆட்டம் மேலும் இறுக்கமடைய மைதானத்தில் சூடு கிளம்பத் தொடங்கியது.

நவஜீவன்ஸ் அணியினர் மேலதிக கோலைப்போட முனைப்புக் காட்டினர்.

ஆனால் அவர்களின் முனைப்பைத் தமது பதிலாட்டத்தில் தவிடு பொடியாக்கினர் யங்கம்பன்ஸ் அணியினர். இதனால் பந்து அங்குமிங்கும் என அலைக்கழிந்த வண்ணமிருந்தது.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்க யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் சசி கோல் போட ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் சிறு மாற்றங்களுடன் களமிறங்க ஆட்டம் முன்னரைவிட சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டாம் பாதியில் இரு அணியினரும் தடுத்தாடும் வியூகங்களைக் கையாண்டதால் எந்த அணி வெற்றி பெறப் போகின்றது என்ற அங்கலாய்ப்பு இரு அணி பார்வையாளர்களையும் தொற்றிக் கொண்டது.

இந்தக் கட்டத்தில் 20 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் உசானந்த் எதிரணி தடுப்பரண்களைத் தகர்த்து கோல் ஒன்றைப் போட அந்த அணி வீரர்களும் ரசிகர்களும் குதூகலமடைந்தனர்.

ஆட்டம் நிறைவடையும் நிலையில் இரு அணியினரும் மேலதிக கோல்களைப் போடாத நிலையில் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியைத் தோற்கடித்து முதலாவது அணியாக இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

(ரி- 108-23)

## கை கொடுத்தது தயாபரன் அதிரடி அரையிறுதியில் கொம்மாந்துறை



யாழ்ப்பாணம்,ஒக்.22
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 5 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் தயாபரனின் அதிரடி கைகொடுக்க கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கொம்பான்துறை இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் வறாவியா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மட்டும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தயாபரன் 55 ஓட்டங்களையும், விதுலன் 10 ஓட்டங்களையும், தர்சன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொக்குவில் வறாவியா விளையாட்டுக் கழக அணி சார்பில் நிக்சன் 10 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கை வீழ்த்தினார்.

77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் வறாவியா விளையாட்டுக் கழக அணி 2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் மனோ, நிக்சன் ஆகியோர் தலா 6 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழக அணி சார்பில் கீர்த்தி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், மயூரன் 7 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ரி- 23)

## அஞ்சல் ஓட்ட கானிவேல்

யாழ்ப்பாணம்,ஒக்.22
யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக 14வயது, 16வயது, 18வயது மற்றும் 20 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான அஞ்சல் ஓட்ட கானிவேல் போட்டி அடுத்த மாதம் நடத்தப்படவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் சுகிர்தனுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ரி- 23)

## இந்துக்கள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.22
சவாலான ஆட்டங்களில் எதிரணிகளை வீழ்த்தின கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி அணிகள்.

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் முதலில் இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 26:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 63:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ரி- 23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.22
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தினால் தீபாவளித் திருநாளை முன்னிட்டு நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு சரஸ்வதி சிறுவர் கழகத் தலைவர் ஜெயக்குமார் விவேக் ஜஸ்ரின்பன் தலைமையில் அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகநிலைய ஆயுள் அங்கத்தவரான திருமதி சின்னத்துரை லோகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். இதில் முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ரி- 23)







கிளிநொச்சி புதுமுறிப்பு மைதானத்தில் நேற்றைய தினம் உதயன் நிறுவனம், தீபாவளி விளையாட்டு விழா ஒன்றை வெகு விமரிசையாக நடத்தியது. இதில் முதன்மை விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ரி)

# காா்ப் பயணமும் சவாலான நாளும்

கிரிக்கெட் விளையாட்டு மீது கொண்ட காதலால் ஒரு சமயம் வாடகைக் கார் பிடித்து மைதானத்துக்குச் செல்ல நேரிட்டதாக சச்சின் கூறியுள்ளார். அது தனது வாழ்க்கையில் சவாலான நாள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் கிரிக்கெட் வரலாற்றில் பல சாதனைகளை குவித்தவர். இவரது சாதனைகளுக்குப் பின்னால் சில சவாலான சம்பவங்கள் நடந்துள்ளன. அப்படி ஒரு சம்பவத்தை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட சச்சின் நினைவூட்டினார்.

இதுபற்றி அவர் கூறுகையில்: அன்றைய தினத்தில் என்னால் தொடர்ந்து காரை ஓட்ட இயலவில்லை. என்னுடைய உடல் பாதிப்புக்குப் பிறகு நாக்பூரில் நடக்க இருந்த கிரிக்கெட் போட்டி அதுவாகும். காலையில் 6.30 மணிக்கு என்னுடைய விமானம் என்பதால், அதிகாலையிலேயே நான் விமான நிலையத்துக்குச் செல்ல வேண்டி இருந்தது. ஒருநாள் ஆட்டத்துக்கான பயணத்துக்காக காரில் விமான நிலையத்துக்கு காலை 5.30 மணியளவில் விரைந்த போது திடீரென்று என்னுடைய கார் வழியிலேயே பழுதடைந்தது. அதனால், நான் ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு விமான நிலையத்தைச் சென்றடைந்தேன். சைக்கில் வண்டியும், காரையும் சேர்ந்த அந்த வண்டியில் என்னுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு சென்றேன். அது என் வாழ்க்கையிலேயே சவாலான நாள் என்று தெரிவித்துள்ளார். (ரி)

# சட்டையைக் கழற்றியமைக்கு வருத்தம்

மைதானத்தில் சட்டையைக் கழற்றி ஆக்ரோசமாகச் சுழற்றியது தவறு என்று வருத்தம் தெரிவித்துள்ளார் இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் இங்கிலாந்தை வென்ற பிறகு தனது சட்டையைக் கழற்றி சுழற்றினார் கங்குலி. அப்போது அது ஒரு சர்ச்சையைக் கிளப்பியிருந்தாலும் அதற்கு முதல் நடைபெற்ற தொடரில் இங்கிலாந்து, இந்தியாவுக்குப் பயணம் செய்து ஒருநாள் தொடரை சமன் செய்த மகிழ்ச்சியில் இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளின்ரொப் தனது சட்டையை மைதானத்திலேயே கழற்றினார். பிளின்ரொப்பின் அந்தச் செயலுக்கு பதிலடியாக கங்குலி லோர்ட்ஸ் மைதானத்தில் சட்டையைக் கழற்றி ஆக்ரோஷமாகச் சுழற்றியதாகவே கருதப்பட்டு வருகிறது. இந்த நிலையில், 2002ஆம் ஆண்டு இந்திய அணி இங்கிலாந்தை வென்ற பிறகு, நான் லோர்ட்ஸ் மைதானத்தில் எனது சட்டையைக் கழற்றி ஆக்ரோஷமாக சுழற்றியது தவறுதான். கடுமையான நெருக்கடியில் இருந்து விடுபட்ட வேகத்தில் அவ்வாறு நடந்து கொண்டேன் என்று கங்குலி வருத்தம் தெரிவித்திருக்கிறார். (ரி)



# சங்கா, ஜெயவர்த்தன மட்டுமேஅணியல்ல



சங்கக்கார, ஜெயவர்த்தன மட்டுமே இலங்கை அணியில் இருக்கிறார்கள் என்று நினைக்காமல் ஏனைய இளம் வீரர்கள் செயற்பட வேண்டும் என சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை பாதியிலே கைவிட்டதால் இந்திய அணி இலங்கையுடன் 5 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரில் மோதவுள்ளது. இந்த தொடர் பற்றி இலங்கை கிரிக்கெட் அணி தெரிவாளர்களின் தலைவராக உள்ள சனத் ஜெயசூரிய ஆங்கில இணையத்தளம் ஒன்று க்கு கூறுகையில்: சில பந்து வீச்சாளர்களுக்கு இந்தியா போன்ற வலிமையான அணியிடம் தமது திறமையைக் காட்ட வாய்ப்புக் கிடைத்துள்ளது. லகிரு திரிமனே, தினேஷ் சந்திமால் மற்றும் நிரோஷன் டிக்வெல்ல போன்ற இளம் துடுப்பாட்டக்காரர்கள் அணியில் இடம்பெறவுள்ளனர்.

இந்த அணி சங்கக்கார, ஜெயவர்த்தன மட்டுமே இலங்கை அணியில் இருக்கிறார்கள் என்று நினைக்காமல் செயற்பட வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குரிய பொறுப்புணர்வை புரிந்து செயற்பட வேண்டும். இந்தத் தொடர் உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி சாதிக்க உதவும் என்று கூறியுள்ளார். (ரி)

# கோஹ்லி அனுஷ்கா நிச்சயதார்த்தம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான விராட் கோஹ்லிக்கும், பாலிவுட் நடிகையான அனுஷ்கா சர்மாவுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெறவுள்ளதாக புதிய செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.



கோஹ்லிக்கும் அனுஷ்கா சர்மாவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. இருவரும் கடந்த ஒரு வருடமாக ஒன்றாக சுற்றி வந்தனர். இருவருக்கும் இடையே காதல் இருப்பதாகவும் கூறப்பட்டது,

இதற்கிடையே விராட் கோஹ்லி அனுஷ்கா சர்மா இடையே திருமண நிச்சயதார்த்தம் நடைபெற இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இரு வீட்டு குடும்பத்தினரும் சமீபத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டனர். இதனால் திருமண நிச்சயதார்த்தம் பற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. இது குறித்து அவர்களது நெருங்கிய நண்பர் கூறும்போது, விராட் கோஹ்லியும், அனுஷ்கா சர்மாவும் ஒருவருக்கொருவர் அன்போடு இருந்ததால் திருமண நிச்சயதார்த்தமே சரியானது என்றார்.

ஆனால் இருவரும் தங்களுக்குள்ளான காதலை இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. (ரி)



# வெற்றியுடன் ஆரம்பித்தார் செரீனா

உலக பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதன் தொடக்க ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்றார்.

4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளும் முடிவடைந்த பிறகு ஆண்டின் இறுதியில் உலக சம்பியன்ஷிப் போட்டி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான உலக பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடைபெறுகிறது. நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் உலகத் தர வரிசையில் முதலிடம் வகிப்பவரும், நடப்பு சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், தர வரிசையில் 7ஆவது இடத்தில் இருக்கும் செர்பியாவின் அனா இவானோவிச்சை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் 6:4, 6:4 என்ற நேர்செற்றில் இவானோவிச்சை வீழ்த்தி முதல் வெற்றியை ருசித்தார். இந்தப் போட்டி தொடரில் செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து பெற்ற 16ஆவது வெற்றி இதுவாகும்.

மற்றொரு ஆட்டத்தில் உலகத் தர வரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் ருமேனியாவின் சிமோனா ஹலேப், 5ஆம் நிலை வீராங்கனை கனடாவின் பவுச்சார்ட்டை எதிர் கொண்டார். பவுச்சார்ட் தனது வழக்கமான சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அவரது ஆட்டத்தில் நிறைய தவறுகள் மேலோங்கி நின்றன. இதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொண்ட சிமோனா ஹலேப் 6:2, 6:3 என்ற நேர்செற்றில் பவுச்சார்ட்டை தோற்கடித்தார். (ரி)

# சாதனைக்குத் தேவை இரண்டு கோல்கள்

ஸ்பானிஷ் லீக் லா லிகா உதைபந்து போட்டித் தொடரின் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற மகத்தான சாதனையை படைக்க பார்ஸிலோனிய நட்சத்திரம் மெஸ்ஸிக்கு மேலும் 2 கோல்கள் தேவையாக உள்ளன.

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர்கள் நெய்மர், மெஸ்ஸி கோல் அடிக்க அந்த அணி எய்பர் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது. ஸ்பெயினில் நடக்கும் லாலிகா உதைபந்து சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் எய்பர்- பார்சிலோனா அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணியின் ஸாவி 60ஆவது நிமிடத்திலும், நெய்மர் 72ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். அதைத் தொடர்ந்து, 74ஆவது நிமிடத்தில் நெய்மர் கடத்திக் கொடுத்த பந்தை மெஸ்ஸி மின்னல் வேகத்தில் கோல் கம்பத்துக்குள் நுழைத்தார். கடைசி வரை ஒரு கோல் கூட எய்பர் அணியால் அடிக்க முடியவில்லை. இதனால் பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் எய்பர் அணியை வீழ்த்தியது.

பார்சிலோனா அணியில் இணைந்து பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள மெஸ்ஸி இந்தப் போட்டியில் ஒரு கோல் அடித்ததன் மூலம் மொத்தம் 250 கோல்களை அடித்துள்ளார். தெல்மோ ஸரா 251 கோல் போட்டு முதலிடத்தில் உள்ளார். இவரது சாதனையை முறியடித்து ஸ்பானிஷ் லீக் லா லிகா உதைபந்து போட்டித் தொடர் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற மகத்தான சாதனையை படைக்க மெஸ்ஸிக்கு இன்னும் 2 கோல்கள் தேவையாக இருக்கின்றன. (ரி)



# டெஸ்ட் தொடர் இலங்கையின்.திட்டம்

அடுத்த ஆண்டு இலங்கை இந்திய அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட 3ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இலங்கை கிரிக்கெட் சபையின் திட்டம் எனத் தெரியவருகிறது. இந்திய அணி இலங்கையை ஒருநாள் தொடரில் பங்கேற்க அழைத்தமைக்கு கைமாறாகவே இலங்கை அணி இந்தத் தொடரி ஏற்பாடு செய்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரை கைவிட இந்தியாவுடன் ஒருநாள் தொடரில் விளையாட இலங்கை அணி சம்மதித்தது. அத்துடன் இலங்கையில் அடுத்த வருடம் 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால் ஒருநாள் தொடருக்கு கைமாறாகவே இந்த டெஸ்ட் தொடரை இலங்கை அணி கேட்டுள்ளதாக தெரியவருகிறது. அந்தத் தொடரை இலங்கையில் நடந்த விரும்புகிறது. அதன் மூலம், இலங்கை அணி நிர்வாகத்துக்கு ரூ. 49 கோடி வருமானம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்; தற்போது இந்தியாவில் ஐந்து ஒருநாள் ஆட்டங்களை விளையாடுவதை உறுதி செய்துவிட்டோம். இரு அணிகள் அடுத்த ஆண்டு 3 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்பது பற்றிய பேச்சுவார்த்தை தொடக்க நிலையில்தான் உள்ளது. இந்தப் போட்டிகளை எங்கள் நாட்டில் நடத்தலாம் என்ற எண்ணத்தில் உள்ளோம்.என்று கூறியுள்ளார்.

இதற்கு பி.சி.சி.ஐ.. தரப்பில் எந்தவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் இது குறித்து நாளை நடக்கவுள்ள பி.சி.சி.ஐ. செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

# தலைமை தாங்குகிறார் கோஹ்லி



இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் 3 ஆட்டங்களுக்கு விராட் கோஹ்லி தலைமை தாங்கவுள்ளார். டோனிக்கு ஓய்வு அளிக்கும் நோக்கத்துடனேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை சுற்றுப்பயணத்தை பாதியிலேயே கைவிட்டது. இதனையடுத்து இலங்கை அணியை இந்திய கிரிக்கெட் சபை அழைக்க இலங்கை அணி நிர்வாகமும் அழைப்பை ஏற்றது. இந்த நிலையில் அந்த ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மகேந்திரசிங் டோனிக்கு முதல் 3ஆட்டங்களில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அவரது தலைமைப் பதவி விராட் கோஹ்லிக்கு வழங்கப்பட்டுள்ளது. குல்தீப் யாதவுக்கு வாய்ப்பு கொடுக்கப்படாமலேயே இந்த ஒருநாள் தொடர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அஸ்வின் அணிக்கு செய்யப்பட்டார். காயமடைந்த மோகித் சர்மாவுக்கு பதிலாக வருண் ஆரோன் அணியில் இடம்பெற்றுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக ஆடிய புவனேஷ்வர் குமாருக்கும் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான 5 ஒருநாள் ஆட்டங்களும் கட்டாக், ஐதராபாத், ராஞ்சி, கொல்கத்தா மற்றும் அகமதாபாத் மைதானங்களில் நடைபெறவுள்ளது. ஆனால் அவை நடைபெறவுள்ள திகதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணி : விராட் கோஹ்லி (அணித்தலைவர்), சிகார் தவான், ரகானே, ரெய்னா, ராயுடு, விருத்திமான் சகா, அஸ்வின், ஜடேஜா, மொகமட் சமி, உமேஷ் யாதவ், இசாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, முரளி விஜய், வருண் ஆரோன், அக்ஷர் பட்டேல். (ரி)

# பி.சி.சி.ஐ. அதிரடி

இந்தியத் தொடரை பாதியிலேயே கைவிட்டுச் சென்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான அனைத்து இருதரப்பு தொடர்களையும் அதிரடியாக ரத்து செய்தது பி.சி.சி.ஐ. மேலும் அந்த நாட்டு கிரிக்கெட் சபை மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் தொடரை ரத்து செய்ததால் பி.சி.சி.ஐக்கு பெருமளவு இழப்பு ஏற்பட்டதாக பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் படேல் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் பி.சி.சி.ஐ. செயற்குழுக் கூட்டம் அவசரமாக நேற்று நடைபெற்றது. இதில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக எதிர்காலத்தில் நடைபெற இருந்த அனைத்து இருதரப்பு கிரிக்கெட் தொடர்களையும் பி.சி.சி.ஐ. ரத்து செய்தது. மேலும் இழப்பீடு கோரும் சட்டத்தை அணுகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சஞ்சய் படேல் கூறுகையில்; தொடரை பாதியிலேயே கைவிட்டதால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. மேலும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருதரப்பு கிரிக்கெட் தொடர்கள் அனைத்தும் இடைக்கால ரத்து செய்யப்படுகிறது. மேலும், பி.சி.சி.ஐயின் அழைப்பை ஏற்றுக்கொண்ட இலங்கை கிரிக்கெட் சபையைச் செயற்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக பாராட்டுகிறோம். இலங்கை இந்த அவசரத் தொடருக்கு ஒப்புக் கொண்டதால் அடுத்த ஆண்டு ஜூலை- ஒகஸ்ட் மாதத்தில் இந்திய அணி இலங்கையில் கிரிக்கெட் தொடர் ஒன்றில் பங்கேற்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் பாதியிலேயே சென்றதால் இந்திய கிரிக்கெட் சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான இழப்பீட்டை அவர்களிடமிருந்து கோருவோம். மேலும் ஐ.சி.சியிடம் இந்த விவகாரம் எடுத்துச் செல்லப்படும் என்றார்.

மேற்கிந்திய கிரிக்கெட் சபையும், மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கமும் செய்து கொண்ட புதிய ஒப்பந்தத்தின் படி வீரர்கள் சம்பளத்தில் 75 சதவீதம் குறைக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தே மேற்கிந்திய வீரர்கள் தொடரிலிருந்து விலகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)





# உயிரைப் பறித்த குட்டிக்கரணம்

மிஜோரம் உதைபந்து வீரர் பீட்டர் பியக்சாங்சுலா தான் அடித்த கோலைக் கொண்டாட குட்டிக்கரணங்கள் அடித்தார். அது அவரது மரணத்தில் போய் முடிந்துள்ளது.

பீட்டர் பியக்சாங்சுலா தனது அணிக்கு சமன் கொடுத்த தனது கோலைக் கொண்டாடும் முகமாக குட்டிக்கரணங்கள் அடித்தார். இதில் அவரது முதுகுத் தண்டு கடும் சேதமடைந்தது. வலியில் துடித்த அவரை உடனடியாக ஐஸ்வால் மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால் சிகிச்சைகள் பயனளிக்காமல் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மிஜோரம் பிறிமியர் லீக் போட்டியில் பெத்லூஹம் வெந்த்லாங் உதைபந்துக் கழகத்துக்கு ஆடிய பீற்றர், தன் அணிக்காக முதல் கோலை அடித்து சமன் செய்தார். அந்த மகிழ்ச்சித் திளைப்பில் மைதானத்தில் குட்டிக்கரணங்கள் அடித்தார். அப்போது தலை நேராக தரையில் மோத அவர் மைதானத்தில் வலியால் துடிதுடித்தார். இதில் அவரது தண்டுவடம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக மருத்துவமனையில் உடனடியாக அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. ஆனால் தண்டுவடத்தில் ஏற்பட்ட பாதிப்பை மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனால் பரிதாபமாக அவர் உயிரிழந்தார்.

சன்மாரி வெஸ்ட் அணிக்கு எதிராக இந்த சமன் கோலை அவர் அடித்து, மகிழ்ச்சியில் கொண்டாட்டம் போட்டு அடிபட்டு மருத்துவமனைக்குச் சென்றார். ஆனால் அவரது அணியோ 2:3 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது. 23 வயதேயான பீற்றரின் மரணத்தினால் மிஜோரம் உதைபந்து வீரர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.




# அணித் தலைவராக கம்பீர்

டில்லி மாநில கிரிக்கெட் அணியின் தலைவராக கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார். இமாசலப் பிரதேசத்தில் விஜய் ஹசாரே கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

இதில் விளையாடும் 15 பேர் கொண்ட டில்லி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணிக்கு தலைவராக கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியில் இடம் பிடிக்க கம்பீர் கடுமையாகப் போராடி வருகிறார். இனி நடைபெறும் உள்ளூர் ஆட்டங்களில் தொடர்ந்து சிறப்பாக விளையாடினால் மட்டுமே அவரால் அணியில் இடம்பிடிக்க முடியும். எனவே தனக்கு மீண்டும் கிடைத்த டில்லி அணியின் தலைமை வாய்ப்பை அவர் சரியாக பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பார். டில்லி அணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு மூத்த வீரர் வீரேந்திர சேவாக்கும் இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்க கடுமையாக முயற்சித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# பிஸ்டோரியஸுக்கு ஐந்து வருடச் சிறை

காதலி கொலை வழக்கில் பரா ஒலிம்பிக் வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸுக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்தது தென்னாபிரிக்க நீதிமன்றம்

மாற்றுத் திறனாளியான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பரா ஒலிம்பிக் வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ் பிரிட்டோரியா நகரில் வசித்து வந்தார். அவரது காதலி ரீவா ஸ்டீன்காம்ப் உடன் கடந்த ஆண்டு காதலர் தினத்தின்போது வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

அன்றிரவு துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து ரீவா உயிரிழந்தார். பிஸ்டோரியஸ் அவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துவிட்டதாக பொலிஸார் குற்றஞ்சாட்டினர். இதனை மறுத்த பிஸ்டோரியஸ், வெளிநபர் குளியல் அறைக்குள் புகுந்து விட்டதாகக் கருதி தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவித்தார்.



இந்த வழக்கை விசாரித்த நீதிவான் தோகோஷில் மிஸிபா காதலியைக் கொலை செய்த ஆஸ்கர் பிஸ்டோரியஸுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

திட்டமிட்டுக் கொலை செய்யவில்லை என்றாலும் தெரியாமல் செய்தாலும் கொலைதான் என்ற அடிப்படையில் அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ரி)

## உள்ளூராட்சி வார விழா

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா எதிர்வரும் நவம்பர் மாதம் மூன்றாம் வாரம் நடத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சபை மேற்கொண்டு வருகின்றது. (வ-173)





**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கிளி/ மத்திய கல்லூரி
ஆரம்ப பாடசாலை மாணவன்
செல்வன் **தர்மேந்திரம் அபிராஜ்**
2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கல்வியில் மேலும் சிறப்புற வாழ்த்துவோர்.

திருமதி வி.இராசேந்திரம் வவுனியா.
பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா, குடும்பத்தினர்.



## பணியாளர்கள் தேவை

**அனுபவமுள்ள பண வசூலிப்பாளர்கள்**

தேவையான சான்றிதழ்கள்:

* பிறப்புச் சான்றிதழ்
* வதிவிட சான்றிதழ்
* தேசிய அடையாள அட்டை பிரதி
* சாரதி (மோட்டார் சைக்கிள்) அனுமதிச் சான்றிதழ்
* பொறுப்புச் சான்றிதழ்
* பாடசாலை விடுகைச் சான்றிதழ்

பணிபுரியும் இடங்கள்:

திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் (மேற்படி இடங்கள் தெரிந்திருப்பவர்கள் மட்டும்).

தொடர்பு: 077 721 8055
072 228 9375
024 492 9002

சினேறு என்ரபிறைசஸ், வவுனியா.

(47905) (12.3.6)


## காட்டு யானைகளால் 60 வரையான காய்க்கும் தென்னைகள் துவம்சம்

நிந்தவூர் மாட்டுப்பளையில் சம்பவம்



நிந்தவூர், ஒக். 22

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாட்டுப்பளை பகுதியிலுள்ள தென்னந்தோப்பு ஒன்றினுள் புகுந்த யானைகள் அங்கிருந்த அறுபதுக்கும் மேற்பட்ட தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

மாட்டுப்பளை பகுதியிலுள்ள நான்கு ஏக்கர் பரப்பளவுள்ள தென்னந்தோப்பினுள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இரண்டு யானைகள் நுழைந்து காய்க்கும் நிலையிலிருந்த தென்னை மரங்களை நாசம் செய்துள்ளன.

குறித்த நாளில் அம்பாறை மாவட்டத்தில் கடுமையான மழை பெய்தது. இதன்போதே யானைகள் தோட்டத்தினுள் நுழைந்துள்ளன.

இதன் காரணமாக தோட்ட உரிமையாளருக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையிலும் இது தொடர்பில் - தீர்க்கமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஓ-10)

## காத்தான்குடியில் டெங்கு பரிசோதனை

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் திங்கட்கிழமை டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு 22 வீட்டு உரிமையாளர்களுக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த டெங்கு பரிசோதனையில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், காத்தான்குடி நகரசபை ஆகியவற்றுடன் காத்தான்குடி பொலிஸாரும், மட்டக்களப்பு விமானப்படை அதிகாரிகளும் ஈடுபட்டனர்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி, புதிய காத்தான்குடி போன்ற பகுதிகளிலுள்ள 167 வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் விழிப்புணர்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாக காத்தான்குடி சுகாதார் வைத்திய அதிகாரி மருத்துவர் யு.எல். நசிர்தீன் தெரிவித்தார். (ஓ-10)


**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இணுவில் வீதியில் 2¼ நிலப்பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 225 5302/021 225 5136

(53411) (12.3.6)



**1816**

**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை**
**தரம் - 6 அனுமதி**

2015ஆம் ஆண்டுக்குரிய தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் அலுவலகத்தில் கடமை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(53415) (12.3.6)

**விண்ணப்ப இறுதித் திகதி: 14.11.2014**

அதிபர்.



## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை,
வட்டாரம் : 15
ஆதன இலக்கம்: 78
கீரிமலை வீதி.

வட்டாரம் 15, கீரிமலை வீதி, ஆதன இலக்கம் 78இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, சண்டிலிப்பாய் இறை "கம்பிராவோடை தல்லுறுவன்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 09 குழி 5 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வராசா பெண் இரத்தினேஸ்வரி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சண்டிலிப்பாய் தெற்கைச் சேர்ந்த இராசரத்தினம் சிவகுமார் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் இரா.வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 8904ஆம் இலக்க 2012.07.01ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கம்பிராவோடை தல்லுறுவன்" நிலப்பரப்பு 09 குழி 5 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் இராசரத்தினம் சிவகுமார் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

சண்முகம் சிவகுமாரன் (JP),
தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை, மானிப்பாய்.

(சி17091) (12.6)



**விண்ணுலக வாழ்வுக்காய்**



எமது சக உத்தியோகத்தர் சே.பொமிக்கோ அவர்களின் அன்புச் சகோதரர்
**சேவியர் வின்சென்டிபோல்**
(இளைப்பாறிய சிறைச்சாலை அதிகாரி)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா விண்ணுலக வாழ்வையடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
பிரதேச சபை, வேலணை.

(53414) (12.3.6)



**நன்றி நவிலலும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம் 07.06.1953 — மறைவு 23.09.2014

அமரர்
**வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி**
B.A. (Hons) Dip.in.Edu, M.E.D, S.L.P.S 2-1
(இளைப்பாறிய அதிபர், யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

கடந்த 23.09.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் துயரச் செய்தி அறிந்து நேரடியாகவும், பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள், தொலைபேசி மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமக்கு உறுதுணையாக நின்று உதவிய ஆசிரிய, மாணவச் சமூகத்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று (22.10.2014) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை மண்டபத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அஸ்தி புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நாளை (23.10.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்குறிச்சி, வரணி. (51971)(10.6.3) குடும்பத்தினர்.



CEYLON THEATRES

எமது ரசிகர்கள் அனைவருக்கும்
**இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

**இப்பொழுது திரையில்**

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
**(Opposite Jaffna Teaching Hospital)**
**Platinum Cinema 10.30am, 2.30pm, 6.30pm**

விசாரணை 021-2227712 www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



# ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தல் சட்டவிரோதமானது

## ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.22

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் சட்டவிரோதமானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட முடியாது என்று தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க.

ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தல் சட்டவிரோதமானது என்று வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் வேலைத்திட்டமொன்றை, மக்கள் விடுதலை முன்னணி, நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் முன்னெடுத்தது:

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது,

"இன்று இந்த நாட்டின் நீதித்துறையில் காணப்படும் சட்ட நடைமுறைகள் அனைத்திலும் ஊழல் காணப்படுகின்றது. நாடாளுமன்ற சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும் ஊழல் உள்ளது. எமது நாட்டின் நீதி, சட்டம் ஆகிய எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு தாம் விரும்பியபடியே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி செய்கிறார்.

இன்று நாட்டு மக்களின் விருப்பத்தின்படி அல்ல மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரின்விருப்பத்தின்படியே இந்த நாட்டின் ஆட்சி நடக்கின்றது. ராஜபக்ஷ எனும் ஒரு குடும்பத்தின் ஆட்சி மாத்திரமே இங்கு உள்ளது.

இன்று ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளது. ஊழல் செய்து அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ, ஆட்சிக்கு வந்து முதலாவதாகக் கூறியது அரசியலமைப்பை பாதுகாப்பேன் என்று. ஆனால் இன்று, அரசியலமைப்புக்கு முரணாக தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 18ஆவது திருத்தத்துக்குஅமையதற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு எந்தவொரு தேவையும் இல்லை. இது சட்டவிரோத தேர்தலாகும். அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட முடியாது. எனவே, இந்த சட்டவிரோதமான தேர்தலுக்கு எதிராக நாங்கள் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். இதன்படி நாடு முழுவதும் சென்று மக்களுக்கு இதனை தெளிவுபடுத்தவுள்ளோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த

**திரு.உதயகுமார் திருவேரகன்**

அவர்கள் 18.10.2014 அன்று கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் (HNDM) "உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டம்" பெற்றுள்ளதையிட்டு மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புகளுடன் வாழ இறைவனை வேண்டுவதுடன் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாராட்டி வாழ்த்துவோர் :
S.சுஜாத்தா(சித்தி), S.வீரசுதாகரன் (மாமா)
(53023)(08)

## கண்ணீர் அஞ்சலி



20.10.2014 திங்கட்கிழமை இறைபதம் எய்திய

**சி.திருச்சிற்றம்பலம்**
**(பொறியியல் உதவியாளர், நிர்வாக குழு அங்கத்தவர்)**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுமநல சேவைகள் நிலையம்
உடுவில்.

## மரண அறிவித்தல்

**திருமதி தவமணி தியாகராசா**



வேலணையைப் பிறப்பிடமாகவும் மாட்டீன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி தியாகராசா நேற்று (21.10.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.10.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 77 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
நவம் குடும்பத்தினர்.
T.P : 0773973164

## மரண அறிவித்தல்



**சிதம்பரி கந்தசாமி**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.33, மலர்மகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரி கந்தசாமி (20.10.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா -வல்லியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், இரட்ணாவதியின் (சின்ராசு) பாசமிகு கணவரும், நாகம்மாவின் பாசமிகு சகோதரனும், ஆனந்தி, பிரபாகரன், வசந்தி, ஜெயந்தி, கிரிஜா, மனோகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன் (கரன்), வினோதினி, கருணாநிதி, சுதாகரன், பிரியந்தி ஆகியோரின் அன்பு மாமனும், கந்தையா, சறோஜினி செல்லையா, மல்லிகாதேவி அரசரட்ணம், ரவீந்திரன் சகுந்தலாதேவி, தெய்வநாதன் செல்வராணி (ராணி) இராஜேஸ்வரி உருத்திரா, சந்திரபோஸ், மனோராணி ஆகியோரின் மைத்துனரும், றோகினி, நந்தினி ஆகியோரின் சித்தப்பாவும், சுபா, சுதன், சபீனா, சஜீவன் ஆகியோரின் பெரியப்பாவும், கௌசல்யா, றொஷான், அபிராமி, அபிராஜ், அங்கஜன், அங்கஜா ஆகியோரின் மாமனும் கலைவாணி, கலைச்செல்வி, கீர்த்தனன், கஸ்தூரி, துளசி, துஷானா, தனுசன், சாஜிதா, சகானா, விந்தியா, அஜீஸ், ஜெஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2014) வியாழக்கிழமை இல்.33 மலர்மகள் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33, மலர்மகள் வீதி,
அரியாலை.
(53418)(10)

தகவல்: குடும்பத்தினர்.
கரன் (மருமகன்) 077 864 0825

## மரண அறிவித்தல்

**செல்லத்துரை டிஸ்கந்தராசா(ஓய்வு பெற்ற அதிபர்)**



புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை டிஸ்கந்தராசா (ஓய்வு பெற்ற அதிபர்) நேற்று (21.10.2014) செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரஞ்சினிதேவியின் பாசமிகு கணவரும் குமாரு கந்தையா, காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் யமுனா, நிறஞ்சனா, திருக்குமரன், காலஞ் சென்ற தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற டினுசாந், கோவர்த்தனன், சவிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் சந்திரகுமார் அதிபர்(மு/விக்கினேஸ்வரா வித்தியாலயம்) நிமல்ராஜ்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும் தர்மராசா (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்), பரமராசா (லண்டன்) இராஜேஸ்வரி, இராசநாயகி, வில்வராசா(லண்டன்), புஸ்பராசா (லண்டன்) இராசகுமாரி (ஆசிரியை-நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீரஞ்சன் (ஆசிரியர்-மு/இரணைப்பாலை மகா வித்தியாலயம்) தவசேசன்(லண்டன்) சாரதாதேவி, குணசீலன்(அபிவிருத்தி உதவியாளர்) உதயசீலன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(23.10.2014) வியாழக்கிழமை மாலை 04 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/17098) (08)

தகவல்: குடும்பத்தினர்.

advt@uthayan.com
0215671111

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
02.03.1942

உதிர்வு
21.10.2010

**பொன்ராசா நித்தியானந்ததேவி**

எங்கள் அன்புத் தேவா!
எங்களை விட்டு மறைந்து
வருடம் நான்கானாலும்
உம் நினைவு
எங்களை விட்டு நீங்காது

என்றும் உங்கள் நினைவுடன்
பொ.மகேஸ்வரன் (மகன்-அமெரிக்கா)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேசசெயலகத்தின் முன்னாள் ஊழியரான

**குமாரசூரியராஜவடிவேல் சந்திரகாசன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம்-கிளிநொச்சி)

அவர்கள் 21.10.2014 செவ்வாய்க் கிழமை அன்று காலமானதையிட்டு ஆழ்ந்ததுயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
கரைச்சி பிரதேச செயலகம்,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்



**இம்மானுவேல் பொன்ராசா**
**(ஒய்வு பெற்ற பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை பணியாளர்)**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கனகபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட ஜோர்ஜ் இம்மானுவேல் பொன்ராசா நேற்று(21.10.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம்அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ்-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசேந்திரம்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னமலரின் அன்புக்கணவரும் சுதர்சன்(பிரான்ஸ்), சுதர்ஜினி(பிரான்ஸ்), மரிய கத்தறீன்(வவர), றொபின்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் வனிதா(பிரான்ஸ்), சந்திரமோகன்(பிரான்ஸ்), ஜெயரத்தினம்(ஜெபா)(செயலாளர், கிளி/கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச), சுதர்ஷினி(ஆசிரியர், கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் அருட் சகோதரி கத்தரின் ஜோர்ஜ்(A.C பூண்டுலோயா), மேரிமக்டலின்(லண்டன்), அன்ரன்(ஏழாலை),மரியநாயகம்(லண்டன்), காலஞ்சென்ற றெஜினோல்ட்(கனடா) மற்றும் பற்றிமாராணி(ஏழாலை), யேசுதாசன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜொனார்த்தன்(பிரான்ஸ்), ஜெறமி(பிரான்ஸ்), ஜெனிற்றா(பிரான்ஸ்), கிறேஸ்வர்ணிகா(பிரான்ஸ்), சொந்றீன்(பிரான்ஸ்), செலின்(பிரான்ஸ்), மறின் வேஜிகா(பழைய மாணவி கிளி/இந்துக் கல்லூரி A.L 2014)மரிக் ஜெலோஜன்(மாணவன் கிளி/ இந்துக்கல்லூரி A.L 2015), புவிசனா(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி தரம் 9) ,கோவர்த்தனா(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி தரம் 6) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல-110
10 ஆம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.

தகவல்:
ஜெயரத்தினம்(ஜெபா)
மருமகன்.
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச கிளிநொச்சி

## மரண அறிவித்தல்



**திருமதி றேனுகாதேவி விஸ்வலிங்கம்**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.151, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றேனுகாதேவி விஸ்வலிங்கம் நேற்று முன்தினம் (20.10.2014) திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-லட்சுமி தம்பதியரின் மருமகளும், அம்பிகைபாகன், சற்குணபாகன், விஜயராணி, குணபாகன் (தம்பிப்பிள்ளை & Co. உரிமையாளர்), உதயகுமாரி, விசாகலட்சுமி, கனகசபை (தலைவர் யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கம்), லோகநாதன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராஜா (சிறீ எலக்றோ வெயிஸ் உரிமையாளர்), விஜயபாரதி, காலஞ்சென்ற கெங்காதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், கலைவாணி (H.F.C முன்பள்ளி ஆசிரியர்), மகாலட்சுமி, சிறீஸ்கந்தராஜா, சுசிலாதேவி (கட்டடங்கள் திணைக்களம்), கோபாலகணேசன் (ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்), சிவநந்தினி, பாஸ்கரி (சுவிஸ்), அற்புதமலர், ரவீந்திரராஜா, காலஞ்சென்ற பரிமளம் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற லோக்காந், கிரிசாந்தி, திரு திருமதி வாசகன்-கீதா (கனடா), திரு திருமதி டெனிசியஸ்வாஸ் கார்திகா (தபால் திணைக்களம்-மானிப்பாய்), றேனுகா, சரணியா துசாரா, சிவதர்சினி, விஸ்வரூபன், மோகனரூபன், லவரூபன், சுகாசினி, தினேஸ், லாவணி, கஜேந்திரன், துவாரகன், அபிராமி, ஆரூரன், விஸ்வா (சுவிஸ்), பிரசாந், கௌத்திகா, சிவானுயா, ஆர்திகா, ஆரணியா ஆகியோரின் பேர்த்தியும், அஸ்வினாத்தின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.10.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

151, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C/17100) (10)

தகவல்: குடும்பத்தினர்.

# வாஸ் குணவர்த்தன வழக்கில் தீர்ப்பு எதிர்வரும் 29ஆம் திகதி

கொழும்பு, ஒக்.22

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் சியாம் கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு பிரதான சந்தேகநபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட 6 பேர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 29ஆம் திகதி அறிவிக்கப்படும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட ஐந்து நீதிபதிகள் குழு முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தங்கள் சார்பான வழக்கை மேல் நீதிமன்றில் விசாரிக்க அதிகாரம் இல்லை என்பதால் விடுதலை செய்யுமாறு கோரி வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட சந்தேகநபர்கள் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். ஆனால் சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணை சாதாரண சட்டத்தின் படி முன்னெடுக்கப்படுவதாக பிரதிவாதிகள் தரப்பு சட்டத் தரணி தெரிவித்தார். எனவே சந்தேகநபர்கள் முன்வைக் கும் குற்றச்சாட்டு அடிப்படை அற்றது என சட்டத்தரணி வாதிட்டார்.

இருபக்க கருத்துகளையும் கேட்டறிந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு வழக்கின் தீர்ப்பு 29ஆம் திகதி வழங்கப்படும் என அறிவித்துள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### அரசுக்கு

களை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டு தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தினர். நேற்று முன்தினமும் தொழிற்சங்கங்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசுக்கு எதிராக ஆரம்பமாகியுள்ள போராட்டங்கள், அரசு மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியையே காட்டுகின்றன என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான எண்ணங்கள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அரசுக்குப் பெரும் சவாலாகவே அமையப்போகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ற)

### வடக்கு

மையும் அதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. அதனால் வெளிமாவட்டங்களுக்குப் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இது தொடர்பில் தனியார் பஸ் சங் கத்தின் உபதலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "பளையில் இருந்து ரயில் சேவைகள் நடைபெற்றபோது கிளிநொச்சி - வவுனியாவுக்கான பஸ்களில் பயணிகள் எண்ணிக்கை பெரிதும் குறைந்தது. தற் போது ரயில் சேவை யாழ்ப் பாணம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் வெளி மாவட்டங்களுக்கு பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் 75 வீதத்துக்கும் அதிகமான வருமான இழப்பைச் சந்தித் துள்ளன. ரயில் சேவையை விடவும், இலங்கைப் போக்கு வரத்துச் சபையால் மேற்கொள்ளப்படும் வெளிமாவட்ட பயணிகள் சேவையும் இதற்குக் காரணம்"- என்று தெரிவித்தார். (ற-14)

### நகைகளை

வேண்டும்." - இவ்வாறு 'உதயனுக்குத்' கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளில் சிலவற்றை, கிளி நொச்சியில் வைத்து கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி உரிய வர்களிடம் கையளித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"போரின் இறுதியில் அரசினால் கைப்பற்றப்பட்ட தங்கம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அதன்போது அரசின் சார்பில் தினேஷ் குணவர்த்தன பதில் வழங்கியிருந்தார். ஆயிரம் கிலோ தங்கம் வரையில் கைப் பற்றப்பட்டது என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் இதனை விட அதிகமான தங்கம் கைப்பற்றியதாகவே எமக்குச் சந்தேகம்.

சரி அவர்கள் ஆயிரம் கிலோ தங்கம்தான் கைப்பற்றி வைத்திருந்தார்கள் என்றால் அதனை இவ்வளவு நாளும் எங்கே வைத்திருந்தார்கள். எங்கேயாவது அடகு வைத்திருந்தாரா ? அல்லது மனைவிக்கு அணியக் கொடுத்து அழகு பார்த்தாரா?"- என்று கேள்வியெழுப்பினார்.

"போரின் போது கைப்பற்றப்பட்ட அனைத்தும் அரசுக்கே சொந்தம். அதனடிப்படையில் திறைசேரியில் தங்கம் வைக்கப் பட்டிருந்தது"- என்று, மக்களிடம் தங்கம் கையளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவித்திருந்தாரே என்று கேட்ட போது, அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், "அப்படியானால் திறைசேரியில் இவ்வளவு காலமும் ஏன் வைத்திருந்தார்கள். உரிமையாளர்களை தெரிந்து கொண்டுதானே வைத்திருந்தார்கள். ஐந்தரை வருடங்கள் வைத்திருந்தவர் இப்போது ஏன் கொடுக்க வேண்டும்? தேர்தலுக்கான லஞ்சமாகக் கொடுக்கின்றாரா ? மிகுதித் தங்கம் எங்கே என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்துவரா?"- என்று அவர் கேள்வியெழுப்பினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்ற அரசமைப்பு பாதுகாப்பை விட்டு வெளியே வந்து இதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-5)

### தடை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை ஐரோப்பிய ஒன்றியத்தால் கடந்த வாரம் நீக்கப்பட்டது. அதை இலங்கை அரசு அரசியல் ரீதியாக விமர்சனத்துக்குள்ளாக்கியிருந்தது. குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரசியல் ரீதியான தடை நீக்கமாகவே அதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான விமர்சனங்கள் இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலே, ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வெளியாகியுள்ளது.

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அரசியல் ரீதியாகத் தீர்மானிக்கவில்லை. இந்தத் தீர்ப்பானது முழுக்க முழுக்க ஒரு சட்டரீதியானது. எனவே நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பிலான புரிதல் மிகவும் அவசியமானது. அரசியல் பொறிமுறைமையும், நீதிமன்றப் பொறிமுறைமையும் தனித் தனியே இயங்குவதே ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடையாளமாகும்.

எனவே, நடைமுறை விதிகளின் அடிப்படையில் சட்ட ரீதியாக புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் பற்றிய தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றன. எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

### தீபாவளியை

மன்றம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தது.

"தீபாவளி தினத்தன்று மதுபான விற்பனை நிலையங்கள் செயற்படுமாயின் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அதனால் மத அனுஷ்டானங்கள், ஆலய வழிபாடுகள், போக்குவரத்து என்பன சீரான முறையில் நடைபெறுவதற்கு மதுபான நிலையங்களை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று அந்த மன்றம் கோரியிருந்தது.

அதையடுத்து இன்றைய தினம் மட்டும் மதுபான நிலையங்களை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்று மது விற்பனையில் ஈடுபடும் மதுபான நிலையங்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கண்காணித்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வர் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-14)

### கோரிக்கைகளை

திகதி வடக்கு மாகாண அபிவிருத் திக் குழுக் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது யாழ். மாவட்டத்தின் சவால்கள் என்று குறிப்பிட்டு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினால் சில விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி தொகுதியை தரமுயர்த்துவதற்காக ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை, தாதிய உத்தியோகத்தர்களுக்கான விடுதி நிர்மாணிப்பதற்கு 109 மில்லியன் ரூபா தேவை, வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவ தாதிகளின் விடுதி வசதிகளை முன்னேற்றுதல் என்பன முன்வைக்கப்பட்டிருந்தன.

சுகாதாரத்துறையைத் தவிர்த்து, அராலி கடல் நீரேரிக்கான பாலம் மற்றும் தாம்போதி அமைத்தல், ஊர்காவற்றுறை - காரைநகர் பாலம் அமைத்தல் என்பனவும் மாவட்டத்தின் சவால்களாக அரச அதிபரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதே கோரிக்கைகள் கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி, ரில்கோ விடுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்ற யாழ். மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் முன்வைக்கப்பட்டிருந்தது.

எதனையும் உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடிய, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முன்னிலையில் யாழ். மாவட்டத்தின் அவசர - அத்தியாவசிய தேவையாக இரண்டு வருடங்களுக்கு முன்பு முன்வைக்கப்பட்ட விடயம் கூட நிறை வேற்றப்படவில்லை. இவ் வாறு கோரிக்கைகளை முன்வைத்து அவை நிறைவேற்றப்படாத நிலையில், மீளவும் அதே கோரிக்கைகளை முன்வைப்பதற்கு பல மில்லியன்களை செலவு செய்து மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தப்பட வேண்டுமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு பெரும் பகுதி நிதி ஒதுக்கப்படுவதாக அரசு சொல்லி வருகின்றது. ஆனால் மாகாணத்தின் தேவை இன்னதென்று அந்தப் பகுதியினரால் அடையாளப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யாமல், தனக்கு வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கே நிதி ஒதுக்கீடு செய்கின்றது - என்று தெரிவித்துள்ளது. (ற-5)

### தமிழர்கள்

மையை நிறைவேற்றியிருக்கின்றார்கள். எங்களை நாமே ஆளுகின்ற காலம் கனிந்து வருகின்றது. கனிந்துவருகின்ற காலத்தில் எங்களுடைய மக்களின் அர்ப்பணிப்புக்கு நன்றி கூறுபவனாகவுள்ளேன். இளைய சமுதாயம் எதிர்காலத்தில் அழிவுகளைச் சந்திக்காமல் சுதந்திரக் காற்றினைச் சுவாசிப்பதற்காக இன்றைய காலம் பொற்காலமாக அமைந்திருக்கின்றது - என்றார்.

இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.கஜதீபன், புதுமுறிப்பு விக்னேஸ்வரா முதல்வர் த.கண்ணபிரான் உட்பட பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (த-18)

### முல்லைத்தீவில்

பொலிஸார், மின்னொழுக்கு காரணமாகவே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் தெரிவித்தனர். (த)

### இரண்டு

நாவாந்துறை வடக்கு, புதிய சோனகத் தெரு போன்ற பகுதிகளில் தாழ்ந்த இடங்களில் குடியிருக்கும் மக்கள் இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வசந்தபுரம், நித்திய ஒளி பிரதேசங்களில் வெள்ளம் கூடுதலாக காணப்பட்டதால் இந்தப் பகுதிகளில் தற்காலிக வாய்க் கால்களை வெட்டி வெள்ளத்தைக் கடலுக்குள் வழிந்தோடச் செய்யும் பணிகளில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பொதுமக்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

இந்தப் பிரதேசங்களில் மக்கள் தாழ்ந்த இடங்களில் குடிமனைகளை அமைத்திருப்பதால் வருடா வருடம் பெய்யும் கன மழையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, யாழ் பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் இந்த உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் சங்கத்தினால் உடனடியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தில் நாவாந்துறை முதலாம், இரண்டாம் கிளைகளில் வைத்து இந்த உலர் உணவுப்பொருள்கள் நேற்று மாலை தொடக்கம் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு இன்று புதன் கிழமையும் தொடர்ந்து விநியோகிக்கப்படும்.

நிவாரணத்துக்கு மா, சீனி, பருப்பு, அரசி என்பன அடங்கியுள்ளன. ஒரே அங்கத்தவருக்கு 385 ரூபாவும், இரண்டு அங்கத்தவர்களுக்கு 490 ரூபாவும், மூன்று அங்கத்தவர்களுக்கு 585 ரூபாவும், நான்கு அங்கத் தவர்களுக்கு 700 ரூபாவும், ஐந்து அங்கத் தவர்களுக்கு மேற் பட்டோருக்கு 805 ரூபாவும் பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப் படும்.

நாவாந்துறை, சூரியவெளி, உதயபுரம் பகுதிகளை சேர்ந்த மக்களுக்கே இந்த வெள்ள இடர் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (த-17)

### அடுப்புக்குள்

10 ஆம் திகதி திருமணம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதற்காக அங்கு உணவு சமைக்கப்பட்ட அடுப்பில் இருந்த நெருப்பு தண்ணீர் ஊற்றி அணைக்கப்படவில்லை. கடந்த 13 ஆம் திகதி நான்காம் சடங்கு இடம் பெற்றது. எனினும் அன்றைய தினம் வேறொரு அடுப்பில் சமையல் இடம்பெற்றுள்ளது. அங்கு தாயுடன் நின்றிருந்த குழந்தை தற்செயலாக திருமணதினத்தன்று சமைக்கப்பட்ட அடுப்புக்குள் காலை வைத்துள்ளது. அதற்குள் இருந்த நெருப்பு சுட்டதனால் குழந்தைக்கு காயம் ஏற்பட்டுள்ளது. நெருப்பு சுடும் போது குழந்தை அலறியுள்ளது. அருகில் நின்றிருந்த தாயார் குழந்தையை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தார்.

காயம் காரணமாக ஏற்பட்ட கிருமித் தொற்றினால் குழந்தை சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இறப்பு விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4)

### வைத்தியசாலை

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால வரலாறுகளை எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு உள்ளது. இந்தச் சம்பவம் எமக்குத் தெரிந்திருந்தாலும் எதிர்காலச் சந்ததிக்கு இவற்றை நினைவுபடுத்த இதனை ஆவணப்படுத்த வேண்டும். இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது தப்பிய சிலர் இன்றும் உள்ளனர். அவர்கள் உட்பட பலரிடம் இது தொடர்பில் தகவல்களைப் பெற்றுத் தொகுத்து ஆவணப் படுத்தவேண்டும். தவறின் இது முற்றுப்பெற்ற - மறக்கப்பட்டுவிட்ட விடயமாகிவிடும். இவர்களுக்கு நினைவுத் தூபி ஒன்றை நிறுவவேண்டும். இதன்போது வெளியிடப்படும் நினைவு மலருக்குப் பலரும் தமது சாட்சியங்களை ஆவணப் படுத்துவதற்குத் தருவார்கள். அது மட்டுமன்றி அதில் கொல்லப்பட்டவர்களின் தியாகங்களையும் வெளிக் கொணர்வதாக அமையும் - என்றார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் கொல்லப்பட்ட 21 பேருக்குமாக மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து ஈகைச்சுடர் கள் ஏற்றப்பட்டன. அந்த நிகழ்வில் பிரதிப்பணிபாளர், மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள், கொல்லப்பட்டவர்கலின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உறவுகள் பலர் புலம்பல்கள், கண்ணீருடன் ஈகைச் சுடர் ஏற்றினர். தொடர்ந்து பலரது நினைவஞ்சலி உரையும் இடம்பெற்றது.

நினைவுத்தூபி ஒன்று பழைய வெளிநோயாளர் பிரிவில் நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டதாகவும் ஆனால் தூபி இதுவரை கட்டப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (த-4)

## குற்றங்களும் கைதுகளும்

கொடிகாமம்

### வரணியில் குடும்பஸ்தர் வீட்டுக்கு கல்வீச்சு

வரணி மாசேரிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் வீடு கடந்த ஞாயிறுக்கிழமை இரவு கல்வீச்சு இலக்காகியுள்ளதாகக் கூறப்பட்டது. குறித்த தினம் இரவு 2 மணிக்குப் பின்பு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறித்த வீட்டின் உரிமையாளர் தகவல் தெரிவித்தார். வீட்டின் நுழைவாயிலுக்கு மேல் ஏறி உட்புகுந்து கல்வீச்சு இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் வீட்டு ஜன்னல் கண்ணாடி முழுமையாகச் சேதமடைந்துள்ளது. வீசப்பட்ட கற்கள் வீட்டு முற்றத்தில் பரவலாக இருக்கக் காணப்பட்டன. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-122)

கொழும்பு

### சப்ரகமுவ மாணவரை தாக்கிய ஐவர் பொலிஸில்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஐவர் பொலிஸில் சரணடைந்துள்ளனர். குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் பலாங்கொடை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 28ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸில் சரணடைந்தவர்களில் இபுல்பே பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார். கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அவர்களுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (வ)

கொழும்பு

### மலேசிய பெண் ஊடகவியலாளர் பாலியல் சம்பவம்: 4 பேர் கைது

இலங்கைக்கு சுற்றுலா வந்திருந்த திருமணமாகாத பெண் ஊடகவியலாளரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
அவர்களில் ஒருவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
மலேசிய ஊடகவியலாளரான குறித்த பெண் அநுராதபுரம் பழைய புனித நகரில் இவ்வாறு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
இந்தக் குற்றச் செயலுக்கு உதவியதாக 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை 24 ஆம் திகதி அடையாளம் காணும் அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு அநுராதபுரம் நீதிவான் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட 4 பேரில் மூன்று பேர் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் அவர்களையும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிவான் மேலும் உத்தரவிட்டுள்ளார். (வ)

வெல்லாவெளி


### தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப்பெண் சடலமாக மீட்பு

வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் வெந்த காட்டுப் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.
இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:
மண்டூர் 1ஆம் பிரிவு வெந்த காட்டுப் பகுதியில் வசிக்கும் நாகரெத்தினம் சுமித்திரா (வயது – 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இன்று அதிகாலை வீட்டுக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களின் உதவியுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
மேலதிக விசாரணையை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

### ஐ.தே.கவினர் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக்.22
கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் பயிற்சி நிறுவனத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மையைக் கண்டறியும் குழுவினருடன் நின்றிருந்த ஊடகவியலாளர்கள் இருவர் கல்வீச்சுத் தாக்குதலால் காயமடைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார். பயிற்சி நிறுவனத்திலிருந்தே கற்கள் வீசப்பட்டதாகவும் அவர் கூறினார். நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ள இந்தத் தாக்குதலின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜனின் வாகனம் சேதமடைந்துள்ளது. ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஆர்.யோகராஜன், அஜித் பி.பெரேரா, நளின் பண்டார ஜயமஹ ஆகியோர் உண்மையைக் கண்டறியும் குழுவில் அங்கம் வகித்திருந்தனர். (வ)

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய சந்தித்துப் பேச்சு



கொழும்பு, ஒக்.22
இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெய்ட்லி, இலங்கை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு புதுடில்லி நோர்த் புளக் அலுவலகத்தில் இன்று இடம்பெற்றது என்றும், இதன்போது பல்வேறு பாதுகாப்பு விடயங்கள் குறித்து பேசப்பட்டன என்றும் இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்தச் சந்திப்பின் போது இந்திய பாதுகாப்பு செயலாளர் ஆர்.கே.மதுரும் சமுகம் அளித்திருந்தார்.
அதேவேளை,
கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இந்திய பாதுகாப்பு செயலாளர் மதுர், இலங்கைக்கு வந்து பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார். (ற)

## 5 நிமிடங்களுக்கு ஒரு சிறுவர் வன்முறையால் உயிரிழப்பு

### 'யுனிசெப்' அமைப்பு தெரிவிப்பு

சர்வதேச ரீதியாக வன்முறை காரணமாக ஒவ்வொரு 5 நிமிடங்களிலும் உலகில் எங்கேனும் ஒரு பகுதியில் சிறுவர்கள் உயிரிழப்பதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்தநிலையில் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்கு முன்பதாக உலகில் சிறார்களுக்கு எதிரான அனைத்து பிரச்சினைகளையும் நிவர்த்திப்பதையே இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
20 வயதுக்கு குறைவான சிறார்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தமது வீட்டிலும், பாடசாலைகளிலும், சமூகத்திலும் பாதுகாப்பற்றவகையில் உள்ளனர்.
துரித நகரமயமாக்கல், இளைஞர் தொழில்வாய்ப்பின்மை மற்றும் சமூக சமநிலை யற்ற தன்மை போன்ற விடயங்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக சிறார்கள் இடர் களை எதிர்நோக்கும் நிலைமை அதிகரித்துள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## தரமற்ற பெற்றோலை திருப்பியனுப்ப நடவடிக்கை

கொழும்பு, ஒக்.22
நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 10,000 மெட்ரிக் தொன் நிறையுள்ள தரமற்ற பெற்றோலை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிராகரித்துள்ளது. சிங்கப்பூரில் இருந்தே இந்தத் தரமற்ற பெற்றோல் கொண்டுவரப்பட்டிருந்தது என்று அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எஸ். அமரசேகர தெரிவித்தார். (ற)

## பயணக் கட்டுப்பாடு குறித்து கூட்டமைப்பு வழக்குத் தொடுத்தால் அரசுக்கே சாதகம்

### வசந்த பண்டார கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.22
"வெளிநாட்டவர்கள் வடக்குக்குச் செல்ல கட்டுப்பாடு விதித்தமையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வழக்கு தொடர்வார்களாயின் அது தற்போதைய சூழ்நிலையில் அரசுக்கே சாதகமானதாக அமையும்" என்று தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் செயலாளரான வசந்த பண்டார தெரிவித்தார்.
வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டுப்பாடானது நாட்டின் பாதுகாப்புக்கும் வலுவாக அமையும் என்றும் அவர் குறிப் பிட்டார்.
வடக்கு மாகாணத்துக்கு வெளிநாட்டவர்கள் செல்வார்களாயின், பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதி பெற வேண்டும் என கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்டது.
அதேநேரத்தில், இந்த பயணக் கட்டுப்பாட்டை தாம் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம் என்றும் தெரிவித்திருந்தனர்.
இவைகுறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"நாட்டின் இப்போதைய சூழ்நிலையைப் நோக்கும்போது இந்தப் பயணத் தடை சரியானது என்றே எமக்குத் தோன்றுகின்றது. ஏனெனில், தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தாவிடில் அடுத்த ஜனவரி மாத முற்பகுதியிலிருந்து அகிம்சை வழிப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
அத்தோடு, கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தால், 8 வருடகாலமாக நீடித்திருந்த புலித்தடையும் இல்லாது செய்யப்பட்டுள்ளது. இந்நிலையால், வடக்கின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஏற்படக் கூடும். அரச சார்பற்ற நிறுவனங்களின் வருகை மற்றும் ஏனைய அமைப்புகளின் வருகை -செயற்பாடுகள் போன்றனவும் புலித் தடை நீக்கத்தால் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.
ஆகவே, இதுபோன்ற சூழ்நிலையை நோக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தாலும், அதில் அரசுக்கு சார்பான தீர்வே கிடைக்கும்என நாம் கருதுகின்றோம். அதேநேரத்தில், வடமாகாணத்துக்கு உரிய ஆவணங்களுடன் ஒருவர் சென்று பாதியிலேயே திருப்பியனுப்பப்படும் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்குமானால் அது எம்மால் ஏற்றுக்கொள்ளப்படாது." - என்று தெரிவித்துள்ளார். (ற)

## பிரச்சினை நீங்கியது தீபாவளிக்கு 'கத்தி'

சென்னை, ஒக்.22
'கத்தி' திரைப்பட விளம்பரங்களில் இருந்து 'லைக்கா' நீக்கப்பட்டுள்ளதாக நடிகர் விஜய் அறிவித்துள்ளார்.
எனவே அந்தத் திரைப்படம் வெளிவருவதில் இருந்த பிரச்சினை நீங்கியதால் தீபாவளி தினமான இன்று கத்தி வெளிவரவுள்ளதாகக் கூறியுள்ளார்.
தயாரிப்பாளர் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள நடிகர் விஜய், ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,
"என்னை நேசிக்கும் அன்பான தமிழக மக்களுக்கும், அன்பு ரசிகர்களுக்கும் வணக்கம்.
சில தினங்களாக சில தமிழ் அமைப்புகள் 'கத்தி' திரைப்படத்தின் தயாரிப்பாளர் 'லைக்கா'



நிறுவனத்தின் பெயரை விளம்பரங்களில் நீக்க கோரிக்கை வைத்திருந் தனர். அவர்களின் வேண்டுகோளை மதித்து படத்தின் விளம்பரங்களில் லைக்கா பெயரை நீக்க தயாரிப்பாளர்கள் ஒத்துக் கொண்டனர். எனவே இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிவடைந்து விட்டது.
எனவே, எதிர்பார்ப்போடு காத்திருந்த ரசிகர்களும், மக்களும் 'கத்தி' திரைப்படத்தை சந்தோஷமாக கண்டுகளிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.
'கத்தி' திரைப்படம் சுமுகமாக வெளிவர எங்களுக்கு ஆதரவு தந்த தமிழக முன்னாள் முதலமைச்சருக்கும், தமிழக பொலிஸ்துறைக்கும், தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்களுக்கும், தமிழக அமைப்புகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து லைக்கா பெயரை நீக்கிய தயாரிப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அனைவருக்கும் [illegible] தீபாவளி வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார். (வ)

# உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வடக்கு மாகாணத்தினுள்ளேயே நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வடக்கு மாகாணத்தினுள்ளேயே நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகளுக்கு, இரு வாரங்களுக்கு முன்னர் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய பட்டதாரிகளுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த நிலையில், உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு தற்போதே நியமனம் வழங்கப்பட்டிருந்தது.
இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களங்களுக்கு கீழ் பயிலுநர் நியமனம் வழங்கியிருந்தது. இதனடிப்படையில் கொழும்பிலுள்ள அமைச்சுக்கு பட்டதாரிகள் சென்ற போது, யாழ்.மாவட்டத்தில் தமது அமைச்சுக்குரிய வெற்றிடம் இல்லை எனவும் கொழும்பில் கடமையாற்றுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பட்டதாரிகளால் மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.
இதன் பின்னர் குறித்த அமைச்சுக்களின் வடக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு, உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 75 பேர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும், 30 பேர் வவுனியாவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியோர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (த-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
12.08.1945

இறப்பு:
02.11.2013



**அமரர் கந்தர் பழனி**
(காரைநகர்)

ஊர் போற்ற வாழ்ந்து - உம்
பேர் சொல்ல எமக்கு வழி சமைத்து
உயர்வுற்று வாழ எமக்குப் பாதை காட்டி
எங்களுக்காக வாழ்ந்தீரையா,
ஆண்டொன்று போனாலும் - எங்கள்
ஆன்மாவில் என்றும் நிலைத்து வாழ்வீர்கள்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(ஆத்மா சாந்தியடைவதாக!)

மீசாலை மேற்கு, மீசாலை. குடும்பத்தினர்.

(C17096/10)

**வங்கியியல் கற்கைநெறி**
**CBF/IABF** இற்கான அனைத்து பாடங்களும் ஒரே இடத்தில்.
* எமது வழமையான ஆசிரியர் குழாம்.
புதிய பிரிவு ஆரம்பம் 25.10.2014 (சனி)
தொடர்பு: K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை அருகில்.
(53400) (46.6.3) 077 459 8430

## கண்ணீர் அஞ்சலி



காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்

**குமாரசூரியராஜவடிவேல் சந்திரகாசன்**
**BA(Hons)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைவதோடு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் காணி மற்றும் அபிவிருத்திஅமைச்சு மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

**A/Lபரீட்சைக்கு தோற்றியோருக்கு**
கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உயர் சம்பளத்துடன் தொழில்புரியக்கூடியதும் திறன் விருத்தி கற்கைநெறிகளுமான இணைய வடிவமைப்பு, வலைப்பின்னல் பாதுகாப்பு ஆகிய பயிற்சி நெறிகள் மைக்ரோசோப்ற் கணினிப் பொறியியலாளர்களினால் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள MCS தகவல் தொழில்நுட்பவளாகத்தில்
**கற்கைநெறிக்கட்டணமின்றி**
கற்பிக்கப்படுகின்றது. சான்றிதழ்களும் பொறியியலாளருக்கான அங்கத்துவமும் ஐக்கிய அமெரிக்க மைக்ரோசொப்ற் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. ஆர்வமுடையவர்கள் தமது பெயர், பிறந்ததிகதி, மாவட்டம் என்பவற்றை 0772395895 இலக்கத்திற்கு உடன் sms செய்து முற்பதிவு செய்து கொள்ளவும். பயிற்சி நெறிகள் வியாழக்கிழமை 23.10.2014ஆம் திகதி பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

**அமெரிக்க லொத்தர் விசா -V2 Travels & Tours**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில்
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Nation Popular Travels & Tours
Hot Line - 021 4 920 920
Nation Job Bank
Hot Line - 071 0 920 920
New Arokya Products
NPC Enterprises
16 1/2, E.S.Fernando Mw, Colombo-06, Tell: 0114378117, Fax: 0114505532
128, Brown Road, Jaffna, Tel: 0214920505, Fax: 0217538325
179, Railway Station Road, Vairavapuliyankulam, Tell: 0244545705, Fax: 0244930831



## மரண அறிவித்தல்

### குமாரசூரிய ராஜவடிவேல் சந்திரகாசன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம், கிளிநொச்சி)**

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசூரிய ராஜவடிவேல் சந்திரகாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.) நேற்று (21.10.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் குமாரசூரிய ராஜவடிவேல் (ஓய்வுநிலை உத்தியோகத்தர்-ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி)- மனோரஞ்சிதம் தம்பதியரின் பாசமிகு மகனும், கமலேசினி (லண்டன்), ஜெயந்தசிறி (வவுனியா), நீலவண்ணன், யமுனாகரன் (சாரதி, மீன்பிடி போக்குவரத்து அமைச்சு, வடமாகாணம்), குமாரசூரியர், ஜனறஞ்சினி (பெல்ஜியம்), முத்துக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிருபாகரன் (லண் டன்), கருணேஸ்வரன் (வவுனியா), பிருந்தினி, சுகிர்தா, கிருஸ்ணராஜா (பெல் ஜியம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானசத்தியன், ஞானகபிலன், ஞான அமிசன், ஜதுசா, ஹர்சா, அஜேஸ், அகேஸ், அஜிந்தா ஆகியோரின் மாமனும், ராஜ பிரபாகரன், ஜக்ஷன், ஜக்ஷனா, தினக்ஷன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (22.10.2014) அச்சுவேலி தெற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக் கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.